விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 27 வெள்ளிக்கிழமை (12.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழக அரசு ஓயாது ஜெயலலிதா முழக்கம்

(சென்னை)



**தமிழருக்கு சமவுரிமை கிடைக்கும்வரை தமிழக அரசு ஓயாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். சட்டசபையில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.**

சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததுதான், இது போன்றதொரு பேட்டியை அளிப்பதற்கான துணிச்சலை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அளித்திருக்கிறது என்ற ஐயம் நடுநிலையாளர்களுக்கு, தமிழ் உணர்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் வரை இலங்கைத்தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படும் வரை சிங்களவர்களுக்கு இணையான அந்தஸ்து அவர்களுக்கு கிடைக்கும் வரை எனது தலைமையிலான அரசு ஓயாது என்பதையும் தமிழர்களின் இந்த நியாயமான உரிமைகளை வென்றெடுக்க தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை எனது அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேட்டியளித்துள்ள இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இந்தியத் தூதர் மூலம் தனது கண்டனத்தை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டப்பேரவையில் நிகழ்த்திய உரையில் தெரிவித்துள்ளார். தமிழ் நாடு சட்டப்பேரவையில் கடந்த யூன் 6ஆம் திகதி அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஹெட்லைன்ஸ் ருடேக்கு அளித்த செவ்வியில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில் இந்தவிவகாரம் நேற்று சட்டசபையில் எதிரொலித்தது. சட்டசபையில் எதிர்க்கட்சிகள் ஒரே குரலில் கோத்தபாயவுக்கு கண்டனம் தெரிவித்தனர். கோத்தபாயவின் விஷமப் பேச்சுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவிக்க (19ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்கு ஒத்துழைப்பு சீனாவுக்கு பாராட்டு

(பீஜிங்)



பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் போது வழங்கிய ஒத்துழைப்புக்காக இலங்கை மக்கள் சீனாவுக்கு நன்றிகளை தெரிவிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீனத் தலைநகர் பீஜிங்கிலுள்ள சர்வதேச கற்கை நெறிகளுக்கான பல்கலைக் கழகத்தினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று காலை கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா மீது அரசு பாய்ச்சல்

(கொழும்பு)



கடந்த மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்ட பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளை அமெரிக்கா கவனத்திற் கொள்ளவில்லை என்பதை இட்டு அரசாங்கம் நேற்று தனது கவலையை வெளியிட்டுள்ளது.

எங்களால் முன்னெடுப்பட்ட பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளை அமெரிக்கா கவனத்திற் கொள்ளவில்லை. இது துரதிர்ஷ்ட வசமானது (19ஆம் பக்கம் பார்க்க)

## கொலை செய்யப்பட்டபின் தூக்கிலிடப்பட்ட சடலங்கள்

### மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் சடலமாக மீட்கப்பட்ட ஆண் மற்றும் பெண் இருவரும் கொலைசெய்யப்பட்ட பின்பே தூக்கிலிடப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கோப்பாயில் இராசபாதை வீதியிலுள்ள வாழைத்தோட்டக் காணியொன்றுக்கு அருகிலுள்ள பனைமரத்தில் ஜோடியாக தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் மற்றும் பெண்ணின் சடலங்கள் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டன.

உரும்பிராய் (19ஆம் பக்கம் பார்க்க)

## உறவுகளைத் தேடி தொடரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

போரின் காரணமாகவும் ஆயுத, புலனாய்வுக் குழுக்களால் கடத்தப்பட்டும் காணாமற் போனவர்களைக் கண்டுபிடித்து கொடுக்கும்படி கோரி நேற்று 2.30 மணியளவில் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தை நாம் இலங்கையர் என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட காணாமற்போன மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர். தமது உறவுகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தரும்படி இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் பதாகைகளை இவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஜே.வி.பி பின்னணியுடன் இயங்கும் நாம் இலங்கையர் அமைப்பு காணாமற்போனோர் குறித்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருவது தெரிந்ததே. (எ-5)


## இந்திய நாடாளுமன்றத்தில் மாற்றப்பட்ட தமிழர் படுகொலை

(புதுடில்லி)

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருந்த விவாதம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அவை நடவடிக்கை குறித்த விபர அட்டவணை திடீரென்று திருத்தப்பட்டுள்ளது.

முதலில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் அறிக்கையில் இலங்கைத் தமிழர்களை இராணுவம் (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் தங்கியிருந்த வீட்டை சுற்றுலா தலமாக்க அரசு ஏற்பாடு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வசிப்பிடத்தை விரைவில் சுற்றுலாத் தலமாக மாற்றுவத்ற்கான ஏற்பாடுகள் நடந்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீடு முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து ஒட்டுசுட்டான் செல்லும் வழியில் பிரதான வீதியில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் உள்ளே காட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ளது.

இந்த வீட்டிற்கு அண்மைக்காலமாக அதிகளவான தென்னிலங்கை சிங்கள மக்கள் வந்து செல்கின்றனர். இதனோடு பெருமளவில் பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட வந்து செல்கின்றனர்.

வெளியில் சாதாரண வீடுபோன்று தோற்றமளிக்கும் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா-ஹிலாரி சந்திப்பின் பின் பௌத்த யாத்திரிகர்கள் மீது தாக்குதல்

### ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் நாட்டில் அச்சுறுத்தல் மற்றும் உடல் ரீதியாக துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் பௌத்த யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

தமிழ் நாட்டிற்கு வரவேண்டாம் என பெரும்பாலான யாத்திரிகர்களை விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய குழுக்கள் அச்சுறுத்தியுள்ளதாக வண.ஹதிகல்லே விமலசார தேரர் கூறினார். (19ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு மரண தண்டனை கைதிகளின் கருணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்றுபேரின் கருணை மனுவை இந்தியக் குடியரசுத் தலைவர் நிராகரித்துள்ளார்.

ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி சென்னையை அடுத்த சிறிபெரும்புதூரில் (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777


# கல்விமாணி விரிவுரை நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகும் என தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ச)


**FINANCIAL SPONSOR**

for Student Visa any country

**VTL Management (Pvt) Ltd**
**Colombo - 3.**

072-9994777/011-7902938


# நாளையும் ஞாயிறன்றும் மின்தடை அமுலாகும்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி மற்றும் கே.கே.எஸ் வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர முத்த மின்விநியோக மார்க்கங்களில் உள்ள மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதாலும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை உரும்பிராய் பிரதேசம், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் குருநகர் ஆகிய இடங்களிலும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஏ)

# ஹொக்கிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை அணிக்கு 11 வீரர்கள் கொண்ட ஆண்களுக்கான யாழ். மாவட்ட ஹொக்கிச் சுற்றுப்போட்டி 2011 இனை இம் மாதம் கடைசிப் பகுதியில் நடத்தவுள்ளது. இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் பாடசாலைகள் தங்களுடைய விண்ணப்பங்களை யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி அலகில் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவதுடன் மேற்படி சுற்றுப்போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு அன்று பிற்பகல் 5.00 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி அலகில் இடம்பெறும் என விளையாட்டு அவைத் தலைவர் அறிவித்துள்ளார். (ச)

# வரலட்சுமி விரதம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் வரலட்சுமி விரத காப்புக் கட்டும் நிகழ்வு இன்று 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.அப்பாக்குட்டி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-78)

# பளையில் புனரமைக்கப்பட்ட பாடசாலைகள் இன்று திறப்பு

பளை மத்திய கல்லூரி,பளை மாசார் அ.த.க பாடசாலை ஆகியன புனரமைக்கப்பட்டு இன்று வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட உள்ளன.

போரினால் அழிவடைந்த பளை மத்திய கல்லூரி, பளை மாசார் அ.த.க பாடசாலை ஆகியன யுனிசொவ் இன் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்பட்டன.

இதில் பளை, மாசார் அ.த.க பாடசாலை இன்று காலை 10.00 மணிக்கும் பளை மத்திய கல்லூரி இன்று நண்பகல் 12.00 மணிக்கும் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

இந்நிகழ்விற்கு பாரம்பரியகைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யுனிசொவ்இன் இலங்கை வதிவிடப் பிரதிநிதி, இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர், வடக்கு மாகாண கல்வி,பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்கின்றனர். (ஏ-5)

# தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த 4ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று காலை 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-136)


**நல்லூர்க் கந்தன் மகோற்சவகால**
**தெய்வீகத் தொடர் இசைப் பேருரை**

இடம்:- நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபம்
தினமும் மாலை 6.30 மணிக்கு
(13.08.2011 சனி நாளை ஆரம்பம்)

**கம்பராமாயணம்**

நிகழ்த்துபவர்:- நல்லைக் குருமணியின்
பிரதம வாரிசு 'கானகதாவாரிதி'
**பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா**

அணி செய்கலைஞர்கள்
வித்துவான் K.பத்மநாதன் -வயலின்
வித்துவான் K.சத்தியன் - ஆர்மோனியம்
வித்துவான் T. இராஜன் - மிருதங்கம்

(5784)

அனுசரணை
லிங்கன் கிறீம் ஹவுஸ்- கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்



**REPAIRING**

சகலவிதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor(LCD, CRT) UPS மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**NORTH LEAD**
COMPUTER SALES AND SERVICE CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0774192275, Fax : 222 4460



**COMPUTER CLASSES**
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற் பிக்கப்படும்.

Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)

**NORTH LEAD** EDUCATIONAL CENTER
No.328,Stanly Raod, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
*Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460*



**IELTS** BRITISH COUNCIL

**IELTS FOR UK STUDENT VISA APPLICANTS**

**What is IELTS?**

IELTS is the international English Language Testing System, the world's proven English language test. Over 1.5 million candidates took the test evetry year to start their journeys into international education and employment.



We Provide
1. A Placement test which determines to which level of English you belong Updated course modules
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. 40 Practice test. 4. Free IELTS pack & Mock Exams

**22.10.2011**
**IELTS** இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.
அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பு



நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

IELTS Registration Centre For British Council

| Course Schedule | Sat & Sun |
| --- | --- |
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30 |

வகுப்புக்கள் ஆரம்பம்
**13.08.2011**

For registration and further details contact
**CITY COLLEGE OF ENGLISH**
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 3216027
077 8803887
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)


# மரண அறிவித்தல்

## முருகேசபிள்ளை சடாட்சரம்

(சாந்தலிங்கம்)



வேலணை மேற்கு, 7-ம் வட்டாரம் சிற்பனையைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசபிள்ளை சடாட்சரம் (காங்கேசு-சாந்தன்) 08.08.2011 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான முருகேசபிள்ளை இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலம்சென்றவர்களான தம்பாபிள்ளை பவளவல்லியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (சாரதாம்பாள்) அன்புக் கணவரும்,

காலஞ்சென்ற சண்முகலிங்கம், அருந்தவநாயகி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், இராசநாயகி, சந்திரலிங்கம் ஆகியோரின் சகோதரனும்,

தற்பரானந்தன் (பரா), கிருபாகரன், ஞானகரன், நற்பரன், ஐங்கரன், திருப்பரன், சாந்தினி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

30, மதவடி லேன்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
(ச.ஐங்கரன்- A.S -Ceylinco Life-யாழ்.கிளை)
0773726103

(C-4003)

## இன்று ஒரு தகவல்

# இரு கருமிகள்

இந்த உலகத்தில் கற்பனையில் வாழும் சில கஞ்சர்களும் உண்டு.

ஒரு ஊரில் இரண்டு கஞ்சர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் அயல் ஊர்களில் வசித்து வந்தார்கள். ஒரு கஞ்சன் தனது மகனைக் கூப்பிட்டு, அயல் ஊரில் எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவனுக்கு பொங்கல் பரிசாக 4 ஆட்டுக்குட்டி தருகிறேன். நீ அதை அவனிடம் கொடுத்துவிட்டு வரவேண்டும் என்றான்.

அதற்கு அவன் சரியென்று பதிலளித்தான்.

ஒரு பையைக் கையில் எடுத்துக் கொள்ளுமாறும் ஆட்டுக்குட்டிகள் ஒவ்வொன்றையும் அதனுள் போடுகிறமாதிரி பிடித்துக்கொள் என்று கூறிவிட்டு ஒன்று, இரண்டு, மூன்று,நான்கு என்று எண்ணிக் கொண்டு வெறும் சைகையாலேயே ஆட்டுக்குட்டியைப் பிடித்துப் போடுவது போல் பாவனை செய்தான்.

அவனது பிள்ளையும் அக்கறையோடு வாங்கிக் கொள்வது போல் வாங்கிக் கொண்டு அயலூருக்குப் புறப்பட்டான்.

அவன் அங்கு சென்று சேர்ந்தபோது குறித்த கஞ்சன் ஊரில் இல்லை வெளியில் சென்றுவிட்டான்.

அவருடைய பிள்ளை மட்டும் வீட்டில் இருந்தான். அப்போது எனது அப்பா உனது தந்தையாருக்கு ஆட்டுக்குட்டி தந்தனுப்பியுள்ளார். பிடித்துக்கொள் என்று பாவனையிலேயே ஒவ்வொன்றாகக் கொடுத்தான்.

தானும் ஏதாவது பதிலுக்கு கொடுக்க வேண்டுமென்பதால் 10 எலுமிச்சை தருகிறேன் எடுத்துக்கொள் என்று ஒவ்வொன்றாகப் போடுகிற மாதிரி பாவனை செய்தான்.

அவனும் அதனை நன்றி கூறிவிட்டு தன்னுடன் எடுத்துச் சென்றான்.

சிறிதுநேரம் கழித்து வெளியில் சென்ற தகப்பனார் வீடு திரும்பினார்.

மகன் நடந்தவற்றைக் கூறினான்.

அதற்கு தகப்பன் எப்படி கொடுத்தாய்? என்று கேட்டார்.

இப்படித்தான் கொடுத்தேன் என்று மகன் சைகையினால் காட்டினான்.

இதைப் பார்த்த தகப்பன் கோபத்தில் மகனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

“10 எலுமிச்சம்பழத்தை கொடுத்து விட்டேன் என்பதற்காகவா அறைந்தீர்கள்” என்று மகன் கேட்டான்.

“அது கூட பரவாயில்லை..... நீ செய்யும் செய்கையானது ஆரஞ்சு பழத்தின் அளவிற்கு பெரிதாகவுள்ளது. அவ்வளவு பெரிதாக ஏன் கொடுத்தாய்? அதுதான் எனக்கு கோபம்” என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டு திணைக்களத்தில் ஆளணிப்பற்றாக்குறை

யாழ்.மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதனால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் யாழ்.மாவட்ட மதிப்பீட்டாளர் எஸ். ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு எமது திணைக்களத்தை நாடிவருகின்றனர். ஆனால் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

அதுமட்டுமன்றி எமது திணைக்களத்தில் சிரேஷ்ட அதிகாரிகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளது.

உள்ளூராட்சிச்சபைக்கான ஆதன உரிமை அனைத்தும் எமது திணைக்களத்தின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த வீடுகளின் மதிப்பீடுகள், காணிகளின் மதிப்பீடுகள் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆதனங்களின் முதற்கட்ட மதிப்பீடுகள் நிறைவடைந்து இறுதிக்கட்ட மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 33 ஆயிரத்து 650 ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இறுதிக்கட்ட மதிப்பீடு முடிவடைந்ததும் யாழ். மாநகர சபையிடம் ஆதன இடாப்பு கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

## திண்ணபுர அந்தாதி வெளியீட்டு விழா

நாவலர் காலத்தில் வாழ்ந்த காரைநகர் கார்த்திகேயப் புலவர் பாடியதும் மகாவித்துவான் சொ. சிங்காரவேலனின் உரை, பேராசிரியர் சா.கைலாச நாதக் குருக்கள், பேராசிரியர் நா.சுப்பிரமணியம் ஆகியோரின்அணிந்துரை, திருப்பனந்தாள் ஆதீனம் ஸ்ரீகாசி மட அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார என்பவற்றோடு கூடியதுமான திண்ணபுர அந்தாதியின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர்ச் சிவன் கோயிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கலாநிதி கா.வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். பேராசிரியர் ப.கோபால கிருஸ்ணஐயர் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பேராசிரியர் இ.குமாரவடிவேல் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவதுடன் அந்தாதி நூலையும் வெளியிட்டு வைப்பார்.

முதற் பிரதியை கல்விக் காருண்யன் தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், கௌரவ பிரதிகளை கார்த்திகேயப் புலவரின் பூட்டன் பிரம்மஸ்ரீ யோகானந்த சர்மாவும் வித்துவான் வை.க. சிற்றம்பலம், கவிஞர் இராசையா குகதாசன் ஆகியோரும் பெற்றுக் கொள்வர்.

தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் சிறப்புரையையும் வித்துவான் வசந்தா வைத்தியநாதனின் நயப்புரையும் கவிஞர் இ. குகதாசனின் நிறைவுரையும் நடைபெறும்.

(ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 40 |
| தக்காளி | 25 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 |
| கோவா | 40 | 80 |
| கரட் | 50 | 70 |
| பூசணி | 25 | 35 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 75 |
| பாகற்காய் | 70 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 110 |
| பயற்றங்காய் | 80 | 90 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | 20 | 35 |
| கறிமிளகாய் | 40 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 160 |
| போஞ்சி | -- | 110 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 |
| கீரை – 1 பிடி | 8 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

## இராசி பலன்

12.08.2011
(ஆடி 27, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 12.14 மணிவரை
உத்தராடம் மாலை 6.08 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
பட்டினத்தார் குருபூசை,
வரலட்சுமி விரதம்.

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகப்படுவீர்கள்.

**இடபம்** வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடங்குவீர்கள், திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு.

**மிதுனம்** கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவை பெறுவீர்கள், வெளியூர்ப்பயணமொன்றால் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்** தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் பணிபுரியும் நாள், பகைவர்கள் விலகுவர், தொழிலில் போட்டிகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** நீண்டநாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்று இன்று நல்லபடியாக நடைபெறலாம், உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், பிள்ளைகளால் பெருமை சேரும் நாள்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், தொழில் முன்னேற்றம் ஏற்படும், வாகன யோகமுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோர் மீது பாசம் கூடும்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், மாலையில் மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் ஆச்சரியப்படத்தக்க வேலையொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்** வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும் நாள், சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்ய வேண்டி வரலாம், மாலை நேரப் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்** பணவரவு அதிகரிக்கும் நாள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கைகூடலாம்.

வளவன்

# தேசிய கலை,இலக்கிய போட்டி முடிவுகள்

(சித்தங்கேணி)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கலா சாரப் பிரிவினால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றோர் விபரம் வருமாறு,

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

த.தேவதர்சினி(துர்க்காபுரம் மகளிர் இல்லம்),க.கலையரசி(துர்க்காபுரம் மகளிர் இல்லம்),சு.விஜிதா (மகாஜனாக் கல்லூரி).

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

க.சிவரூபிநாயகி(யூனியன் கல்லூரி), சு.சோபிதா(கணேசா அறநெறிப்பாடசாலை).

**கவிதை (கனிஷ்ட பிரிவு)**

ந.கபிலன்(யூனியன் கல்லூரி), இ.ஜெனார்த்தனி(யூனியன் கல்லூரி),கை. லோகிதாஸ் (கணேசா அறநெறிப்பாடசாலை).

**கவிதை (சிரேஷ்ட பிரிவு)**

பொ.கஜவதனி (மகாஜனாக் கல்லூரி), கோ.சங்கீதா (யூனியன் கல்லூரி),

**கவிதை (திறந்த பிரிவு)**

ம.மாலா தேவி(அளவெட்டி மத்தி), ந.சிறிஸ்கந்தராசா (கணேஸ்வரம் அளவெட்டி), ஈ.இந்திராணி (பன்னாலை)

**சிறுகதை(திறந்த பிரிவு)**

உ.லக்ஷனா(அளவெட்டி வடக்கு), ந.சிறிஸ்கந்தராசா (அளவெட்டி மத்தி), ப.உதய குமார் (அளவெட்டி வடக்கு),

**இலக்கிய விமர்சனம்( திறந்த பிரிவு)**

ம.மாலாதேவி(அளவெட்டி மத்தி), த.சாரங்கபாணி (மாரி சிட்டி அளவெட்டி),ஈ.இந்திராணி (பன்னாலை)

**பாடலாக்கம்(திறந்த பிரிவு)**

ம.மாலாதேவி(அளவெட்டி மத்தி), த.சாரங்கபாணி (மாரிசிட்டி அள வெட்டி), கு.கமலேஸ்வரன்(துர்க்காபுரம் தெல்லிப்பளை).

**பாடலாக்கம்(திறந்த பிரிவு) ஆங்கிலம்**

வெ.சக்திவேல்

**இலக்கிய விமர்சனம்( திறந்த பிரிவு) ஆங்கிலம்**

வெ.சக்திவேல் (ஸ்ரீ-17)

## (யாழ். மதுவரி திணைக்களத்தினால்)
# கடந்த 8 மாதங்களில் 2 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா அபராதம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 8 மாதங்களில் சட்டவிரோத கசிப்பு விற்பனை, சாராயம் மற்றும் கள்ளு என்பவற்றை வீட்டில் வைத்து விற்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் 116 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 2 இலட்சத்து 62 ஆயிரத்து 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மதுவரி திணைக்கள பொறுப்பாதிகாரி நா.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மதுவரி திணைக்களமானது சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கள்ளினை வீட்டில் வைத்து விற்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்படி கடந்த 8 மாதங்களாக மேற்படி குற்றத்தின் பேரில் 116 பேர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றத்திலும் ,ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்திலும் வழக்குத்தாக்கல் செய்து மேற்படி அபராத தொகையை விதித்துள்ளது.

இவ்வாறன குற்றங்களில் ஈடுபடுவர்களுக்கு எதிராக மதுவரி திணைக்களம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் வருகை தற்போது அதிகரித்து வருகிறது. அவற்றை கட்டுப்படுத்த எமது திணைக்களம் அக்கறையுடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

# வடமராட்சி கிழக்கில் செஞ்சிலுவை சங்கத்தினால் 150 வீடுகள் அமைப்பு

(அச்சுவேலி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களான வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய கிராமங்களில் சேதமடைந்த வீடுகளின் கணக்கெடுப்பு அண்மையில் நடைபெற்றது.

இதற்கமைய முழுமையாக சேதமடைந்த வீடுகள் 393 எனவும் சாதாரணமாக சேதமடைந்த வீடுகள் 221 என்றும் பதிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 150 வீடுகளை கட்டி கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை அப்பகுதி மக்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை இங்குள்ள தபாலகங்கள் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் பணிமனை தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-70)

# அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணை வடக்கு ,சோளாவத்தை அருள்மிகு ஞானவரவர் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி 108 சங்காபிஷேகம் மற்றும் அடியார்கள் பங்குபற்றும் பஞ்ச விளக்கு பூசையும் இடம் பெறும்.

அதனை தொடர்ந்து கூடலூர் வ.செல்வராசா குழுவினர் மற்றும் கல்வியங்காடு திருமதி உதயகுமார் செல்வநாயகி குழுவினரதும் மங்கள வாத்திய கச்சேரி இடம்பெறும்.

தொடர்ந்து மாற்று திறனாளிகள் இருவருக்கும் உதவி வழங்கும் நிகழ்வும் நடைபெற்று அதனை தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக கணக்கியல்துறை பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி தலைமையில் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

# தேர்த்திருவிழா நேரடி அஞ்சல்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய தேர்த்திருவிழா நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தேர்த்திருவிழா நிகழ்வுகள் கனேடிய தமிழ் வானொலில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது.

இந்நேர்முக வர்ணனையை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ)

# இரதோற்சவம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ)

யாழ்.செய்திகள்

# ஆசிரிய உதவியாளருக்கான அவசர கலந்துரையாடல்

ஆசிரிய உதவியாளருக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக ஆசிரிய உதவியாளர்க்ளின் சம்பள உயர்வு, அவர்களது பயிற்சி நெறி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக பாரம்பரிய மற்றும் சிறுதொழில் அமைச்சர் ஊடாக மேலதிகாரிகளை சந்திக்க உள்ளதாகவும் எனவே அன்றைய தினம் சகல ஆசிரிய உதவியாளர்களையும் கலந்து கொள்ளுமாறும் சங்கம் அறிவித்துள்ளது. (ந)

# அதிக விலையில் சீமெந்து விற்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## யாழ்.பாவனையாளர் அதிகாரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள விலையிலும் பார்க்க அதிக விலையில் சீமெந்து விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் எதிராக அதிகார சபை அதிகாரி என். சிவசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2010 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட சீமெந்து விற்பனைக்குரிய வர்த்தமானி விலைப் பட்டியலின்படி ஒரு பைக்கற் சாதாரண போட்லாந்து சிமெண்ட் (எஸ்.எல்.எஸ்.107 தரச் சான்றிதழ் பெற்றது) 750 ரூபாவுக்கும் போட்லாந்து சுண்ணாம்பு சிமெண்ட் (எஸ்.எல்.எஸ் தரச் சான்றிதழ் பெற்றது) 750 ரூபாவுக்கும் மசனரி சிமெண்ட்( எஸ். எல்.எஸ்.515 தரச் சான்றிதழ் பெற்றது) 700 ரூபாவிற்கும் விற்பனை செய்யும்படி உத்தரவிடப்பட்டது.

இந்த விலைகளிலும் பார்க்க அதிகமாக விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# முன்னேற்பாட்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)


தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் தொடர்பான முன்ஏற்பாட்டுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தொண்டைமானாறு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பொதுமண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு விழா உரிமையாளர், ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், திருப்பணி சபை உறுப்பினர்கள் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)





ஸ்ரீ பாத தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் ம.நிரேஸ்குமார் எழுதிய இவர்களும் யதார்த்த வாதிகள் தாம் என்ற சிறுகதை தொகுப்பின் நூல் அறிமுக விழா அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையுரை ஆற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நூலாசிரியர் ம.நிரேஸ்குமார் ஏற்புரை வழங்கு வதையும் பீடாதிபதியால் நூலின் சிறப்புப் பிரதி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



யாழ்.மறைமாவட்ட 2010 ஆம் ஆண்டு மறைக்கல்வித் தேர்வில் யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலையின் தரம் 10 இல் கல்வி பயிலும் செல்வி.அல்பிறட் மெல்சியா முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினையும் செல்வன் டன்ஸ்ரன் ஜெயக்குமார் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.மேற்படி மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம்.

# — மட்டக்களப்பில் நெற்செய்கை — மேற்கொள்ளும் விவசாயிகள் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகின்ற நிலையில் நெல்லை உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கிலோ சம்பா நெல் 30 ரூபாவுக்கும் ஏனைய நெல் இனங்கள் கிலோ 28 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென உத்தரவாத விலையைக் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கம் விதித்திருந்தது.

அதனடிப்படையிலேயே கடந்த ஆண்டும் நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு அரசாங்கம் பணித்திருந்தது வெள்ளத்தினால் கடந்த பெரும்போக நெற்செய்கை முற்றாக அழிவடைந்த நிலையில் விவசாயிகள் தங்களது நகைகளை அடகு வைத்தும் வங்கிகளில் கடன்பெற்றும் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்டிருந்தனர்.

தற்போது அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அரசாங்கம் நெல்லை உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்யவோ, உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்யுமாறு உத்தரவிடாததால் இடைத்தரகர்களால் ஒரு கிலோ 20 ரூபாவிலிருந்து 21 ரூபா வரையே கொள்வனவு செய்யப்படுகின்றதாக கவலை தெரிவிக்கும் விவசாயிகள் இதனால் பாரிய நட்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தினால் பெரும்போக நெற்செய்கை அழிவுற்று எந்தவித முதலீடும் அற்ற நிலையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட குறிப்பிட்டளவு விதை நெல்லை மாத்திரம் கொண்டு ஏனைய விதைநெல்லை நகைகளை அடகு வைத்து மூடை 3 ஆயிரத்து 200 ரூபாவிற்குக் கொள்வனவு செய்த நிலையில் மூடை ஆயிரத்து 400 ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயச் செய்கைக்காக திமிலைதீவு மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த இடம்பெயர்வின் போதும் மீண்டும் வெள்ளத்தினாலும் ஒட்டுமொத்த விவசாயச் செய்கையும் அழிவடைந்த நிலையில் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக செய்கையிலும் விவசாயிகள் பாதிப்படையாது பாதுகாக்க அரசாங்கம் உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கையெடுப்பதோடு இடைத்தரகர்களின் சுரண்டலில் இருந்து பாதுகாக்கவும் அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸ்ரீ-2)

# கிளிநொச்சியில் மாவட்டத்தில் நூறு ஏக்கரில் கரும்புச் செய்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு செய்கையை மேற்கொள்ள சிறு உற்பத்தி ஏற்றுமதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்தே முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் குறித்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதேவேளை, யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னர் 300 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் செய்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

இதன்போது ஒரு ஏக்கரில் 100 விவசாயிகளுக்கான வாய்ப்பினை வழங்கவுள்ளதுடன் வருடாந்தம் தலா 60 ஆயிரம் ரூபாவை வருமானமாக பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் கடும் வரட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்த்தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு யுனிசெவ் நிதியீட்டத்துடன் நீர்வழங்கல் அதிகாரசபையினால் நிரந்தரமான நீர் விநியோகத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பூநகரி பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டத்தின் படி முக்கொம்பன் பகுதியில் இருந்து பூநகரிக்கும் முழங்காவிலில் இருந்து-இரணைமாதா நகருக்கும் வேரவில் பகுதியில் இரு நந்து வலைப்பாட்டிற்கும் குழாய் மூலம் நீரை விநியோகிப்பதற்கான மூன்று திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-84)

# பெற்றோருடன் உரையாட ரிசானாவுக்கு அனுமதி

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக் தனது பெற்றோருடன் தொலைபேசியில் உரையாடுவதற்கு முதற்தடவையாக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

றம்ழான் நோன்பு காலத்தை முன்னிட்டு ரிசானாவுக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சவுதி அரேபிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தனது பெற்றோருடன் தொலைபேசியில் உரையாடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதற்காக அங்குள்ள அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பதாக அண்மையில் அவரை பார்வையிடச் சென்ற இலங்கை சமூக சேவையாளரிடம் ரிசானா கூறினார். அண்மையில் றியாத்துக்கு சென்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா உள்ளிட்ட குழுவினர் அந்நாட்டின் பிரதி தொழில் அமைச்சரை சந்தித்து றிசானாவின் விடுதலை தொடர்பில் பேசியதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரிசானாவை காப்பாற்றுவதற்கு உயிருக்கான இழப்பீட்டை செலுத்த அதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகவிருப்பதாவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பூநகரியிலுள்ள சனசமூக நிலையங்களை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

(பூநகரி)

போர்க்கால இடம்பெயர்வையடுத்து மக்கள் மீளக்குடியமர்ந்தும் இயங்காத நிலையில் உள்ள 25 இற்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்களை மீள இயக்கி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்து,பதிவுகளைமேற்கொண்டு இயங்குவதற்கான நடவடிக்கைகளை பூநகரி சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவசோதி கேமலதா மேற்கொண்டு வருகிறார்.

இதற்கமைய வாரத்தில் மூன்று சனசமூக நிலையங்கள் என்ற அடிப்படையில் புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வுருகிறது.

புதிதாக மூன்று சனசமூக நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்வுக்கு முன்னதாக சகல கிராமங்களிலும் சனசமூக நிலையங்கள் இயங்கி வந்தமைகுறிப்பிடத்க்கது. (ஸ்ரீ-2-84)


# இலங்கை வங்கி

## கட்டிடங்கள் தேவை

வடமாகாணத்தில் கீழ்க்காணும் இடங்களில் வங்கிக் கிளைகள் / விரிவாக்கற் காரியாலயங்களுக்காக ஏற்ற கட்டிடங்கள் இலங்கை வங்கிக்கு தேவைப்படுகின்றது.

| இடம் | தேவையான தளப்பரப்பு |
|---|---|
| திருநெல்வேலி | 2,000 - 2,500 சதுர அடி |
| மானிப்பாய் | 2,500 - 3,000 சதுர அடி |
| சாவகச்சேரி | 2,000 - 2,500 சதுர அடி |
| சுன்னாகம் | 2,500 - 3,000 சதுர அடி |
| முருங்கன் | 750 - 1,000 சதுர அடி |
| செட்டிகுளம் | 750 - 1,000 சதுர அடி |
| நெடுங்கேணி | 750 - 1,000 சதுர அடி |
| வவுனியா கடை வீதி | 750 - 1,000 சதுர அடி |
| ஒட்டுசுட்டான் | 750 - 1,000 சதுர அடி |
| பரந்தன் | 750 - 1,000 சதுர அடி |
| முல்லைத்தீவு | 2,000 - 2,500 சதுர அடி |
| சங்கானை | 750 - 1,000 சதுர அடி |
| காரைநகர் | 1,000 - 1,500 சதுர அடி |
| கோப்பாய் | 1,000 - 1,500 சதுர அடி |
| மடு | 750 - 1,000 சதுர அடி |
| ஆண்டான் குளம் | 750 - 1,000 சதுர அடி |

உத்தேச கட்டிடம் கீழே குறிப்பிடப்பட்ட வசதிகளை உடையதாக இருத்தல் வேண்டும்.

- ஜெனரேட்டர் அறை 09 அடி - 10 அடிக்கு இடைப்பட்டது.
- நீர் வழங்கல் மற்றும் சேமிப்பு தாங்கி வசதி
- 03 கட்ட மின்சாரம்
- மாபிள் தரை
- கழிவறை மற்றும் குளியலறை வசதிகள்
- வாகன தரிப்பிட வசதி
- அவசரகால வெளியேற்றத்துக்கான வெளிக்கதவு
- தீவிபத்து காப்புறுதி வசதி

ஆர்வமுள்ளோர் கட்டிட வரைப்பட பிரதிகள் மற்றும் விதிக்கும் நிபந்தனைகள் (ஏதாவது இருப்பின்) ஆகியன உட்பட அனைத்து விபரங்களையும் இந்த விளம்பரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
இலங்கை வங்கி
வடமாகாண காரியாலயம்,
இல.476, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# நல்லூர் ஆலய சூழலில்...

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 9வது நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் திருமதி குமுதா உமாகாந்தன் வழங்கும் பாட்டுக்கச்சேரி இடம்பெற வுள்ளது. இதில் வயலின்–கே.பத்மநாதன், மிருதங்கம்–எஸ்.துரைராசா, முகர்சிங்- எஸ்.செந் தூரன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

* * * * *

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமயச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் மாலை 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 9ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் *ஆலயமும் ஆன்மீகமும்* பற்றி எஸ்.கே.என். தவராஜா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அத்தோடு இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை, யாழ்ப்பாணம் காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

* * * * *

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வும் இன்று தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை மாலை 6 மணி முதல் 7 மணிவரை நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இதில் இன்றைய நிகழ்வில் கலாநிதி ஸ்ரீ தர்ஷனின் தெய்வீக இசை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ)

# இவ்வருட இறுதிவரை ஐ.தே.க. தலைமைத்துவத்தில் மாற்றமில்லை

## கட்சியின் தவிசாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினர்கள் தலைமைத்துவ சர்ச்சை தொடர்பில் நீண்ட விவாதம் நடத்தி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படும் எனவும் அது கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவாக மேற்கொள் ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் அனைவரும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டுமென சிரேஷ்ட தலைவர்கள் வலியுறுத்தியுள்ள்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கட்சித் தலைமைப் பொறுப் பிற்கு கரு ஜயசூரியவை நியமிக்க வேண்டும் என்பதில் சஜித் தரப்பினர் தீவிரம் காட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கட்சித் தலைமைப் பொறுப்பில் மாற்றம் ஏற்படுத்த முடியும் என கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசி யக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டமொன்று நடத்தப்படவுள் ளதாகவும் இந்தக் கூட்டத்தில் முக்கிய தீர்மா னங்கள் எடுக்கப்படலாம் எனவும் எதிர்பார்க் கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ரணிலின் பதிலுக்கு காத்திருக்கும் ஐ.தே.க.மறுசீரமைப்பாளர்கள்

எஞ்சியுள்ள உள்ளூராட்சி தேர்தல்களு க்கு முன்னர் இயன்றவரை விரைவாக கட்சி யின் தலைமைப் பதவியை பிரதித் தலைவர் கரு ஜயசூரியவிடம் ஒப்படைப்பது குறித்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் சொல்லுக்காக காத்திருப்பதாக ஐ.தே.க. மறுசீரமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எஞ்சியுள்ள உள்ளூராட்சித் தேர்தல்க ளில் வெற்றி பெறுவதற்கு கட்சியின் தலை மைத்துவத்தில் உடனடி மாற்றம் ஏற்படுவது அவசியம் என நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து எமக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அவர் மௌ னம் சாதிக்கிறார். ஆனால் இவ் விடயத்திற்கு அவர் பதிலளிப்பார் என நாம் நம்புகிறோம் என மத்தும பண்டார கூறினார்.

அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று வினவப்பட்டபோது பேச்சுவார்த்தைகள் நடை பெறுகின்றன. இது கட்சியின் சார்பான கோரி க்கையல்ல. நாட்டின் சார்பான கோரிக்கையா கும். தலைமைத்துவம் மாறாவிட்டால் இத் தேர்தல்களில் நாம் வெற்றி பெற முடியாது என்றார். அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் தலாதா அத்துகோரள செய்தியாளர் மாநாட் டில் பேசுகையில்,

அண்மையில் நடைபெற்ற கட்சியின் செயற் குழுக்கூட்டத்திற்கு சமுகமளித்த 42 பேரில் 36 பேர் தலைமைத்துவ மாற்றத்திற்கு ஆத ரவு தெரிவித்ததாக கூறினார். (ஸ்ரீ-2)


# அன்னதான நிகழ்வு

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழாவான நாளைய தினம் (13.08.2011) சனிக்கிழமை லயன் E.S.P. நாகரத்தினம் (P.M.J.F), தலைவர், லயன்ஸ் கழகம், நல்லூர் அவர்களின் அனுசரணையுடன் துர்க்கா மணி மண்டபத்தில் அன்னதான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அடியார்கள் அனைவரும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

(சி/3997)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 9ஆம் திருவிழா



## தாமரை தூவிச் சாமரை வீசுவோம்

கந்தா உன் காலடியில் நான் பணிந்தேன்
வந்தே துணை நிற்பாய் என்கால் நடமாட
சந்தமொடு பாடிப் பண்ணுடனே உன் தலத்தில் வந்தே
நல்லூர்ப் பதிமேவும் வள்ளிமணாளா
செந்தாமரை தூவிச் சாமரையும் வீசி
பந்தமுடன் பக்தர் புடைசூழ வீதி உலா
சந்தனமும் பன்னீரும் சாம்பிராணி
வந்தூதும் நல்ஓசை நல்லூரிலல்லோ!

க.சுவஸ்திகா, கரவெட்டி.

## நல்லூரான் குலம் காப்பான்

அஞ்சேலென வந்தவர்க்கருளும் நாதா
அடியார் குலம் காக்கும் வரதா
தஞ்சமெனத் தலம் வந்தோம் வேலா
சேவற் கொடி கொண்ட கந்தா
வஞ்சமரில் சூரனுயிர் பறித்த குமரா
நெஞ்சமதில் நல்லூரான் நிழலாட
இன்சுவைத் திருப்புகழ் பாடியாடக்
குஞ்சரத்தான் தம்பி நல்லூரானே!

இ.காவியா, கரவெட்டி.

## நற்கதி பெற்று நம்மினம் வாழ

கற்பூர தீபம் அருளொளி தெரிய
கதிரவன் ஒளி கனகம் சொரிய
அற்புத தேவாரம் திக்கெட்டும் முட்ட
அரோகரா பண் விண்ணை எட்ட
நற்கதி பெற்று நம்மினம் வாழ
நல்லருள் என்றும் பாரினைச்சூழ
பொற்பதம் பணிந்தோம் நல்லைக்குமரா
பொன்னெழில் பரப்பி பாருலகைக் காப்பாய்

சந்தியா பாலா, அல்லைப்பிட்டி.

## கும்பிட்டோம் குறைதீர வழிகாட்டையா!

அலங்காரம் அந்தாதி அநுபூதியே
அருணகிரி புகழ்தன்னை முறையோதியே
நலங்காண நல்லூரை நாம் நாடியே
நால்வேதப் பொருளோனே உனைப்பாடியே
விலங்கான மனமென்றும் விரைந்தோடவே
வேலாவுன் அருட்பார்வை வரந்தேடவே
குலங்காக்கும் குமரேசன் படியேறியே
கும்பிட்டோம் குறைதீர வழிகாட்டையா!

நயினைக் கவிஞர் இராகுலன்.

கருணை மழை பொழிவாய் கதிர்வேலனே!



உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம்
என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
அண்ணா தயாரிப்புக்களே!
அண்ணா தொழிலகம்
இணுவில்
(சி/3998)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள்

புண்ணியாமீன், மஸீதா புண்ணியாமீன்

## பகுதி - I

♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ கீழ்வரும் அட்டவணையில் சில எழுத்துக்களும் இலக்கங்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றை அவதானித்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி செயலாற்றுக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 3 | 4 | B | C | 5 | C | 6 | 6 |
| 3 | 7 | G | 6 | E | 6 | 6 | D | 8 |
| F | 3 | 7 | G | C | 9 | 4 | 6 | H |
| 8 | 9 | B | 5 | K | 6 | E | 5 | 5 |
| C | 6 | M | 8 | H | N | 3 | A | 7 |

01. அட்டவணையின் சரிமத்தியிலுள்ள கட்டத்தில் இடம்பெற்றுள்ளது. ஓர் எழுத்தாயின் L என்றும் அன்றேல் ஓர் இலக்கமாயின் N எனவும் அடைப்புக்குள் எழுதுக. (...............)

02. இங்கு அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளது ஓர் எழுத்தாயின் W என்றும் அன்றேல் ஓர் இலக்கமாயின் M எனவும் அடைப்புக்குள் எழுதுக. (...............)

03. இங்கு இடம்பெற்றுள்ள இலக்கங்களின் எண்ணிக்கை எழுத்துக்களின் எண்ணிக்கையை விட குறைவாயின் S என்றும் அதிமாயின் R எனவும் அடைப்புக்குள் எழுதுக. (...............)


04. பின்வரும் கட்டங்களில் கிடைவரிசையில் முதலிரண்டு எண்களைப் பெருக்கும்போது வரும் விடை 3வது நிரலில் உள்ளது.

| | | |
|---|---|---|
| 8 | A | 48 |
| B | 3 | 45 |
| 5 | 8 | C |

இதன்படி A+B+C யின் பெறுமதியை எழுதுக. ..............

♦ 5ம், 6ம் வினாக்களில் தரப்பட்ட மூன்று உருக்களுக்கும் பொருந்தக்கூடிய சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

05.



1. ஆகாயம் 2. காற்று 3. அழகு


06.




1. ஒளி 2. அலங்காரம் 3. இரவு

♦ கோலத்துக்கமைய வெற்றுக் கூட்டுக்கள் வரவேண்டிய உருவின் எழுத்தை அவ் வெற்றுக்கூட்டுக்குள்ளே எழுதுக.


07.




A B C




08.




A B C




09.



A B C



♦ கீழே காணப்படும் உருவை அவதானித்து 10 - 12 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.




10. வட்டத்திற்கு மட்டும் உரித்தான இலக்கம் எது? ...............

11. வட்டத்திற்கும் முக்கோணத்திற்கும் மட்டும் உரித்தான இலக்கம் எது? ...............

12. செவ்வகம், வட்டம், முக்கோணி ஆகிய மூன்றுக்கும் பொதுவான இலக்கம் எது? ...............

♦ 13 - 20 வரையிலான வினாக்களுக்குரிய மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

13. கோடைக்கு - மழை போன்று பசிக்கு - ....................

1. சோறு 2. வயிறு 3. ஆகாரம்

14. இரும்பு - வலிமை எனின் நெருப்பு - ....................

1. விறகு 2. வெப்பம் 3. சுவாலை

15. நோய்க்கு - சிகிச்சை எனின் அறிவுக்கு - ....................

1. பாடசாலை 2. புத்தகம் 3. கல்வி

16. நீண்ட வாங்கொன்றில் சில பெண்கள் அமர்ந்திருந்தனர். அந்த வரிசையில் 22வது பெண் இருப்பது சரிமத்தியிலாகும் எனின், அந்த வரிசையில் எத்தனை பெண்கள் அமர்ந்துள்ளனர்?

1. 44 2. 45 3. 43

17. பெறுமதி கூடிச் செல்லும் வகையில் அமைந்துள்ள உலோகங்களின் வரிசை எது?

1. தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு
2. செம்பு, இரும்பு, தங்கம், வெள்ளி
3. செம்பு, இரும்பு, வெள்ளி, தங்கம்

# இல்லங்கள் தோறும் செல்வங்கள் தங்க இனிய திருநாளாம் வரலட்சுமி விரதம்

செல்வ வளமும் சுபீட்சமும் வீட்டில் நிறையச் செய்வது மகாலட்சுமி வழிபாடு. வரம் தரும் அன்னையாக இலட்சுமியை வழிபட்டுப் பலனடையவே வரலட்சுமி நோன்பு எனும் விரதம் ஏற்பட்டது.

வரலட்சுமி விரதத்தின் மேன்மையைச் சொல்லும் புராணக் கதைகள் நிறையவுண்டு. பூவுலகில் சௌராஷ்டிர நாட்டின் ராணியாகவிருந்த சுசந்திரா செல்வ வளத்தின் மமதையால் ஒருமுறை மகாலட்சுமியை அவமதித்தாள். கர்வம்கொண்டு அன்னை இலட்சுமியை அவமதித்ததால் செல்வமனைத்தும் இழந்து வாடினாள்.

ராணி சுசந்திராவின் மகள் சாருமதி. தெய்வாதீனமாக ஒருமுறை வரலட்சுமி விரதம் பற்றி அறிந்தாள். அதுமுதல் அந்த விரதத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கினாள். சாருமதியின் இந்த விரதத்தால் மகிழ்ந்த அன்னை இலட்சுமி அவளுக்கு நலன்களனைத்தும் அருளினாள். தன் மகளின் நிலையைப் பார்த்து அவள் கடைப்பிடித்த வரலட்சுமி விரதத்தைத் தானும் கடைப்பிடித்து இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றாள் சுசந்திரா. அவளது வாழ்வு மீண்டும் வளம் நிறைந்ததாக ஆனது. இது வரலட்சுமி விரதம் பற்றிய ஒரு கதை.

ஒருமுறை அன்னை பார்வதியின் சாபத்திற்கு ஆளானாள் தேவருலகின் கணதேவதையான சித்ரநேமி. இவள் அப்சரஸ் பெண்கள் கடைப்பிடித்த வரலட்சுமி விரதத்தைக் கண்டாள். அதைப்போல தானும் விரதமிருக்க எண்ணினாள். அவர்களிடமிருந்து விரத முறைகளைக் கேட்டு விரதமிருந்து சாபவிமோசனம் பெற்றாள் என்று ஒரு குறிப்பு உண்டு. மேலும் "வரலட்சுமி நமஸ்துப்யம்" என்ற முத்துஸ்வாமி தீட்சிதரின் கிருதியில் வரலட்சுமி விரதம் குறித்த மேன்மை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனைத்து வளங்களையும் அருளும் வரலட்சுமி விரத பூஜை இன்றாகும். குறிப்பாக பெண்கள் இந்த விரதத்தை மேற்கொள்வது சிறப்பு. சுமங்கலிகள் தாலி பாக்கியத்திற்காகவும் சுபீட்சம், சௌபாக்கியம் பெறவும் இந்த விரதத்தை மேற்கொள்வர்.

திருமணமான பெண்கள் தங்கள் திருமணத்தை அடுத்து வரும் வரலட்சுமி பூஜையிலிருந்து ஒவ்வொரு வருடமும் விரதம் மேற்கொள்ள வேண்டும்.

## இன்று வரலட்சுமி விரதமாகும்

வரலட்சுமி விரதத்தின்போது வீட்டுவிலக்காகவிருந்தால் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை இந்த பூஜையைச் செய்யலாம் என்பதாகவும் பெரியவர்கள் குறிப்பிடுவர். இதைச் செய்யும்போது சிறுபெண்களும் உடனிருந்து நோன்புச் சரடைக் கட்டிக்கொள்ளலாம். மிக விரிவாகச் செய்ய இயலாவிட்டாலும் ஈடுபாட்டோடு தெரிந்த பாடல்களைப் பாடி மகாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி, பூக்களால் அர்ச்சித்து, நிவேதனம் செய்து, நோன்புச் சரடைக் கையில் கட்டி, நிவேதனத்தை எல்லோருக்கும் கொடுத்து, வயதான சுமங்கலிப் பெண்களை வணங்கி, தானங்கள் செய்து இந்த விரத பூஜையை நிறைவுசெய்யலாம்.

பிம்பத்தை வைக்க இயலாத இடங்களில் வீட்டின் பூஜை அறையை ஒட்டிய சுவரில் வெள்ளையடித்து அம்மனின் திருவுருவத்தை வரைந்து வழிபாடு செய்வர். பூஜைக்காக வைக்கப்படும் கலசத்தில் காதோலை, கருகமணி, எலுமிச்சம்பழம் முதலியவையும் இடப்படும்.

இந்தப் பூஜையின் முடிவில் மஞ்சள் கயிறை (சரடு) பூஜித்து கையில் கட்டிக்கொள்வர். மஞ்சள் கயிறு மங்கலத்தின் அறிகுறி. மகாலட்சுமியை தனலட்சுமி, தானியலட்சுமி, தைரியலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி என அஷ்டலட்சுமிகளாக வழிபடுவர்.

எட்டுவகையான செல்வங்களை வாரி வழங்குபவள் அன்னை இலட்சுமி. மஞ்சள் பட்டு உடுத்தி பரந்தாமன் திருமார்பில் குடியிருப்பவள் இலட்சுமிதேவி. இவ்வாறு அஷ்டலட்சுமிகளுடன் வரலட்சுமியையும் சேர்த்து ஒன்பது இலட்சுமிகள் என்கிறது சாஸ்திரம். எனவே ஒன்பது நூல் இழைகளால் ஆன, ஒன்பது முடிச்சுகள் போடப்பட்ட நோன்புக் கயிறை (சரடை) பூஜையில் வைக்க வேண்டும். இதற்கு "தோரக்ரந்தி பூஜை" என்று பெயர்.



பின்னர் மூத்த சுமங்கலிப் பெண்களுக்குப் பிரசாதத்தைக் கொடுத்து அவர்களிடம் ஆசி பெற்று பூஜையை நிறைவுசெய்ய வேண்டும்.

ஆலயங்களில் நோன்புக்கயிற்றைக் கட்டிக்கொண்டவர்களும் தங்கள் இல்லங்களில் மீண்டும் வந்தபின் பூஜை அறையில் அன்னை திருமகளின் திருவுருவத்திற்கு முன் தீபமேற்றி வழிபாடாற்றுவது இன்றியமையாததாகும்.

மகாலட்சுமியின் அருள் பரிபூரணமாகக் கிடைக்க வரலட்சுமி விரதத்தை மேற்கொள்வோம். சகல ஐஸ்வர்யங்களும் பெறுவோம்.

**தி.மயூரகிரி சர்மா**

# இடம்பெயர் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதியுறுகின்றனர்

## நாம் இலங்கையர் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடம்பெயர் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதியுறுவதாக நாம் இலங்கையர் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சில இடம்பெயர் முகாம்களில் போதியளவு உட்கட்டுமான மற்றும் அடிப்படை வசதிகள் கிடையாது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் இடம்பெயர் முகாமிற்கான மின்சார விநியோகம் கடந்த மூன்று ஆண்டுகளாக துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாக நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

பூந்தோட்டம் இடம்பெயர் முகாமில் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் மின்சார வசதியின்றி குறித்த மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அரசாங்கம் குறித்த மக்களுக்கு மின்சார வசதியை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

முகாம்களில் வாழும் மக்களை மீள் குடியேற்றுவதில் அரசாங்கம் அசமந்தப் போக்கைப் பின்பற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பூந்தோட்டம் இடம்பெயர் முகாமின் மின்சார விநியோகம் துண்டிக்கப்படவில்லை என மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் பி.எச்.புஷ்பகுமார குறிப்பிட்டுள்ளார்.

சிலவேளைகளில் தற்காலிகமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கலாமே தவிர நிரந்தரமாக மின்சாரம் துண்டிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இரண்டாயிரம் பேர் தப்பியோட்டம்

மோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 2 ஆயிரம் குற்றவாளிகள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தினால் அண்மைய அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தக் குற்றவாளிகள் பல்வேறு வழிகளைப் பயன்படுத்தி தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பாக அரசியல் வாதிகளின் ஒத்தழைப்புடனும் தப்பிச் சென்றுள்ளனர்.

வெளிநாடுகளில் பதுங்கியிருந்த மோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சில குற்றவாளிகள் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீன்பிடி படகுகள் மற்றும் போலிக் கடவுச் சீட்டுகளைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பிச் சென்றுள்ளனர். (ஸ்ரீ-2)

### லண்டன் வன்முறைகளில்

# இலங்கைத் தமிழர் ஒருவரின் கடை அடித்து நொருக்கப்பட்டது

லண்டனில் கடந்த ஐந்து நாட்களாக நிலவிய வன்முறைகளில் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ள பல வர்த்தக நிலையங்களில் இலங்கைத் தமிழர் ஒருவரின் கடையும் அடித்து நொருக்கப்பட்டு அனைத்துப் பொருட்களும் சூறையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு லண்டன் பகுதியிலுள்ள கந்தையா சிவாகரனின் கடை முற்றாக அழிந்துள்ள நிலையில் அனைத்துமே முடிந்து விட்டது. எனது ஜீவனோபாயம் முடிந்து விட்டது. எனது 11 வருடகால வாழ்க்கை போய் விட்டது என மிகவும் கவலையுடன் அவர் கூறினார்.

கடந்த 11 வருடங்களாக விடுமுறை எதுவும் பெறாமல் வாராந்தம் 90 மணித்தியாலங்கள் உழைத்தவர் இவர். ஆனால், இப்போது அவரின் கடையின் பொருட்கள் வன்முறையாளர்களால் கொள்ளையடிக்கப்பட்டு கடையும் நொருக்கப்பட்டுள்ளது.

இவரின் கடைக்கு ஏற்பட்ட சேதம் சுமார் 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரின் கட்டடத்திற்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தாலும் அதனுள்ளிருந்த பொருட்கள் காப்புறுதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புலிகளை பயங்கரவாத இயக்கமாக பட்டியல் படுத்தக்கூடாது

## ஐரோப்பிய நீதிமன்றில் மனுத்தாக்கல்

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கமாக பட்டியல்படுத்தக் கூடாது என ஐரோப்பிய நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை மேலும் ஆறுமாத காலத்திற்கு நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தீர்மானித்திருந்தது. எனினும் இந்தக் தீர்மானம் சர்வதேச சட்டங்களுக்கு புறம்பானது என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு ஜனநாயக ரீதியில் தமது போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக அறிவித்துள்ளனர் என சட்டத்தரணி விக்டர் கோப் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் புலிகளை தொடர்ந்தும் பயங்கரவாத பட்டியலில் இணைப்பது பொருத்தமாகாது. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகளுக்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்தினர். சுயநிர்ணய உரிமைக்காக போராட்டம் நடத்திய ஓர் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பட்டியல்படுத்துவது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது.

சுயநிர்ணய உரிமைகளை வழங்குமாறு போராட்டத்தை முன்னெடுக்கும் இரண்டு தரப்பினரின் ஒரு தரப்பினை மட்டும் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்



கடவுள் உண்டா? இல்லையா? உண்மையை ஒரே வார்த்தையால் துணிச்சலாகச்சொல்ல முடியுமா? (இக் கேள்விக்கான பதில் தொடர் கீழே)

...ஞானமடைந்த மனிதர் இங்கே இருக்கிறாரே அவரையே கேட்போம் என்று வந்திருந்தார்.

இருளில் மறைந்து நின்று தயங்கித் தயங்கிக் கேட்டார். "கடவுள் இருக்கின்றாரா?"

அவரை நிமிர்ந்து பார்த்து விட்டு தீர்மானமாகச் சொன்னார் புத்தர், "கடவுள் இல்லை."

சிஷ்ய சமூகத்தில் மறுபடியும் குழப்பம் ஆரம்பமாகி விட்டது. ஏனெனில் மற்றவர்களின் அபிப்பிராயங்களை வைத்துக் கொண்டு

## ஆன்மீகம் 08

கடவுள் விடயத்தில் முடிவெடுக்கக் கூடாது.

கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்று உங்களுக்குத் தெரியாது என்பதை முதலில் ஒப்புக் கொள்ளுங்கள். இருக்கிறாரா? இல்லையா... என்று தேடுங்கள். எங்கே தேடுவது என்கிறீர்களா? உங்களுக்குள்ளேயே தேடுங்கள்.

கடவுள் உண்டா இல்லையா.... என்பதை நீங்களே உணரமுடியும்.

இந்த மண்ணில் விளைவதைத் தான் நீங்கள் சாப்பிடுகிறீர்கள். அந்தச் சாப்பாடு உங்களுக்குள் போய் உங்கள் உடலை முழுமையடையச் செய்கிறது. அப்படிப் பார்த்தால் நீங்கள் சாப்பிடுகிற எதுவுமே மண் தான். மண்ணை உட்கொண்டு அதை மனிதனாக்குகிற சக்தி உங்களுக்கு உள்ளேயே இருக்கிறது என்றால் அதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளுங்கள்.

அழுவதும் கண்ணீர் விடுவதும் சோகம் என்றாலும், ஆறுதலளிக்கும் சுகமும் அதற்குள் பொதிந்து கிடப்பது எதை உணர்த்துகிறது?

அழுவதும் கண்ணீர் விடுவதும் சோகம் என்று சொல்வதே நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதற்கு அடையாளம். நீங்கள் என்றால் உங்களை மட்டும் சொல்லவில்லை. சமூகத்திலேயே அப்படியோர் எண்ணம் இருக்கிறது. ஏனென்றால் பொதுவாக மனிதனுக்கு பாதிப்பு ஏதாவது ஏற்படுகிறபோதுதான் கண்ணீர் வருகிறது. ஒன்று பாதிப்பு வரவேண்டும் அல்லது பயம் வர வேண்டும். இப்படி இருந்தால்தான் பலருக்கும் கண்ணீர் வருகிறது. ஆனால் உங்களுக்குள் எந்த உணர்வு முழுமையாக ஏற்பட்டாலும் கண்ணீர் வரும்.

ஆனந்தத்தை உணர்ந்தாலும் கண்ணீர் வரும் அன்பை உணர்ந்தாலும் கண்ணீர் வரும். தியானம் செய்து உங்களுக்குள் அமைதி தீவிரப்பட்டாலும் க்ண்ணீர் வரும்.

எப்போது அழுகையில் சுகம் இருக்கிறது என்பதை உணர்ந்து விட்டீர்களோ, இனி பாதிப்போடும் வலியோடும் கண்ணீரை சம்பந்தப் படுத்திப் பார்ப்பதை விட்டுவிடுங்கள். உங்களுக்குள் ஏற்படும் ஒரு முழுமையான அனுபவத்தின் வெளிப்பாடுதான் கண்ணீர் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு தந்தை, தன் குழந்தைகளுக்கு நண்பனாக இருக்க வேண்டுமா? ஆசிரியனாக இருக்கு வேண்டுமா?

ஒரு குழந்தை பிறக்கும் போது பெற்றோர்கள் அதற்கு எதாவது கற்றுத் தர வேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த உலகில் பிழைப்பு நடத்துவதற்கான சில வழிமுறைகளை வேண்டுமானால் நீங்கள் கற்றுத் தரலாம் ஆனால் இந்த உயிர் குறித்தோ, ஆனந்தமாக வாழ்வது குறித்தோ உங்கள் குழந்தைக்கு நீங்கள் கற்றுத்தர முடியுமா என்ன? உங்களை விட உங்கள் குழந்தைகள் தான் ஆனந்தமாக இருக்கிறார்கள். அப்படியானால் வாழ்வின் அடிப்படையை நீங்கள் அவர்களுக்கு கற்றுத்தர முடியாது. மாறாக நீங்கள் தான் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள முடியும். ஒரு வீட்டில் குழந்தை பிறக்கிறதென்றால் வாழ்க்கை குறித்து நீங்கள் கற்றுக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பு அது. குழந்தைக்கு நீங்கள் முதலாளி இல்லை. ஒரு குழந்தையின் வருகை உங்கள் வாழ்வையே இன்பமயமாக்கு கிறது. எனவே ஒரு கடவுளைப் போல அந்த குழந்தையை நீங்கள் நடத்த வேண்டும். வளர்ந்த பிறகு அதற்குள் ஒரு நன்றியுணர்வு மலரும். எனவே குழந்தைக்குள் உங்கள் போதனைகளை திணிக்காமல் குழந்தைகளைப் பார்ந்து வாழ்க்கை என்றால் என்ன என்று கற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் அடிகடி வற்புறுத்தகிற 'ஆனந்தம்' என்பதன் அடிப்படை என்ன? அதைத் தெரிந்து கொள்வதற்குத் தேவைப்படும் ஆய்வு முறைகள் என்னென்ன?

ஆனந்தத்தில் உண்மையான ஆனந்தம், பொய்யான ஆனந்தம் என்று எதுவும் இல்லை நீங்கள் உண்மையில் நிலைத்திருக்கும் போது நீங்கள் ஆனந்தத்தில் திளைக்கிறீர்கள். நீங்கள் உண்மையோடு தொடர்பு கொள்ளும் போது இயல்பாகவே நீங்கள் ஆனந்தத்தில்தான் இருப்பீர்கள் நீங்கள் உண்மையுடன் இருக்கிறீர்களா அல்லது உண்மையுடன் இல்லையா என்பதைப் பொறுத்தே நீங்கள் ஆனந்தத்தில் இருக்கிறீர்களா அல்லது ஆனந்தத்தில் இல்லையா எனத் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கேள்வியே, ஒரு குறிப்பிட்ட சிந்தனையிலிருந்து வந்திருக்கலாம். உதாரணமாக நான் சூரிய அஸ்தமனத்தைப் பார்க்கும் பொழுது ஆனந்தம் அடைகிறேன். இது உண்மையான ஆனந்தமா? அல்லது தியானத்தில் இருக்கும் பொழுது நான் ஆனந்தமடைகிறேன். இதுதான் உண்மையான ஆனந்தமா? இப்படி நீங்கள் எப்படி ஆனந்தம் அடைகிறீர்கள் என்பது முக்கியமல்ல எப்படியோ இப்பொழுது ஆனந்தத்தில் இருக்கிறீர்கள். இதுதான் முக்கியம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இணையத்தில் தமிழ் இதழ்கள்

02

இன்றைக்கு தமிழில் ஆயிரக் கணக்கான மென்பொருட்கள் உள்ளன. மென்பொருட்கள் தயாரிப்பில் உலக அளவில் இன்று தமிழர்கள் முன்னணியில் உள்ளனர்.

இன்று இணையத்தின் வளர்ச்சியாலும் தமிழ் ஆர்வலர்க்ளின் துணையோடும் தமிழுக்காக சுமார் மூவாயிரம் இணைய அமைப்புகளும் சுமார் பத்து இலட்சம் இணையப் பக்கங்களும். இணையத்தில் உள்ளன.

### மின் இதழ்கள், அச்சு இதழ்கள்

தமிழ் இணையத்தளங்களில் மின் இதழ்களும் அச்சு இதழ்களும் இன்று பலவாறு பல்கிப் பெருகியுள்ளன. பொதுச் செய்திகளையும் பொழுது போக்குகளையும் முறையாக நம்பகமான வகையில் பரப்பும் இதழியற் பணிகள் இணையம் என்னும ஊடகத்தின் வழியே நிகழ்த்தப்படும் பொழுது இணைய இதழாக மாற்றம் பெறுகிறது.

இன்று இணையத்தில் எண்ணிலடங்கா இணைய மின் இதழ்களும் அச்சு இதழ்களும் தமிழை உலகுக்கு வெளிக்காட்டுகின்றன.

### இணையத்தளத்தில் தமிழ் மின் இதழ்கள்

இணையம் பல்துறை கருத்துச் சுரங்கம். கணினியைத் திருமணம் செய்து கொண்டவள். கடைசிவரைக்கும் ஒற்றுமையாய் இருக்கும் உலக ஜோடி. இதனால் தமிழ் மொழி மட்டும் முன்னேற்றம் அடையவில்லை. உலக மொழிகளும் முன்னேற்றம் பெறுகின்றன. இணையத்தில் கல்வியை அடுத்து இணைய இதழ்கள் என்று சொல்லப்படுகின்ற மின் இதழ்கள் இன்று பல்கிப் பெருகியுள்ளன. அச்சு இதழியல் தொழில் நுட்பத்தின் மிகப்பெரிய மாற்றத்தைக் கணினி தோற்றுவித் துள்ளது. இவை தவிர இணையத்தில் இதழியல் என்று புதிய பிரிவும் தற் போது தொடங்கியுள்ளது. தமிழ் மொழியில் பல இணைய இதழ்கள் வெற்றிரமாகத் தொடங்கப்பட்டு வருகின்றன. இது தமிழுக்குக் கிடைத்த புதிய வரவாகும்.

### இணையத்தில் இதழ்கள் தோன்றக் காரணம்

தமிழகத்தை விட்டுத் தொழில் காரணமாக மேலை நாடுகளுக்குச்

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

சென்ற தமிழர்கள் தமிழைப் பேசவும் கேட்கவும் வழியில்லாமல் இருந்த நிலையில் இணையம் அவர்களைச் சந்திக்க வைக்கும் பாலமாக இருந்தது. இணையம் மூலம் தங்களைப்பார்ப்பதற்காக இணைய இதழ்களையும் தம்முன் கலந்துரையாடல்களை உருவாக்கிக் கொள்ளவும் மின்னஞ்சல் மூலம் செய்திகளையும் கருத்துக்களையும் அனுப்பித் தொடர்பு வைத்துக்கொள்ளவே இணைய இதழ்கள் தோன்றின.

இணையத்தில் தமிழைப் புலம் பெயர்ந்த தமிழர்கள் 1986 முதல் பயன் படுத்தத் தொடங்கினர். முதல் முயற்சியைத் தாங்கள் உருவாக்கிய தமிழ் எழுத்துருக்கள் மூலமாக மின்னஞ்சல் அனுப்பி ஒருவருக்கொருவர் உறவை வளர்த்தனர்.

1992-1993 ஆம் ஆண்டுகளில் எஸ்.டி தமிழ் இலக்கியமன்றம் ஒரு தமிழ் இலக்கய மின் இதழை நடத்தியது. இதுதான் உலகின் முதல் தமிழ் மின் இதழாகும். பின்னர் தமிழர் வாழும் அனைத்து இடங்களிலும் தமிழ் மின் இதழ்கள் தோற்றம் பெற்றன. இன்று இணையத்தில் பல்வேறு தமிழ் மின் இதழ்கள் நடத்தப் படுகின்றன. புலம் பெயர்ந்தோரின் உணர்வுளையும் படைப்புகளையும் மனி இதழ் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமிழ் மின் இதழ்கள் உலக அளவில் உள்ள தமிழ் வாசகர்களை எட்டுகின்றன. இதன் மூலம் தமிழ் மொழியின் சிறப்புகள், கலை, பண்பாட்டுப் பகிர்வுகள்,தேடல்கள், பார்வைகள் பன்முக நோக்கில் பரவி வருகின்றன.

உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் இடத்தால் வேறுபட்டு, பண்பாட்டு நாகரிக மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தாலும் தமிழால் தமிழ் இணையத்தால் இன்று ஒன்றுபட முடிகிறது. இதற்குப் பெரும் பங்காற்றி வருவது தமிழ் மின் இதழ்களேயாகும்.

### இணையத்தில் தமிழ் மின் இதழ்கள்

இணைய மின் இதழ்கள் அச்சு இதழ்ளைப்போலவே மாத இதழ்கள், வார இதழ்கள் நாள் இதழ்கள் என வகைப்படுத்தப்பட்டு வெளிவருகின்றன. இவை பெரும்பாலும் இலக்கியம் சார்ந்த இதழ்கள் என்பது பொதுப் பண்பாக உள்ளது. இந்த இதழ்கள் பெண்களுக்கானவை. கவிதைகளுக்கானவை. இலக்கியங்களுக்கானவை, கலைக்கானவை, செய்திளுக்கானவை என்ற பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்றன.

இணையத்தில் பல்வேறு மின் இதழ்கள் தோன்றியுள்ளன. தோற்றம் பெற்றும் வருகின்றன.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ் கொம்பியூற்றர் என்ற கணிப்பொறி மின்னிதழ் தொடங்கப்பட்டது. இதில் இலக்கியம் தொடர்பான செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு நாடகங்கள், விஞ்ஞானச் செய்திகள் வெளிவருகின்றன.

(தொடரும்)

அரிமா. பொறிஞர்.க. பட்டாபிராமன்
/தமிழ்நாடு

# வேலணை பெருங்குளம் ஸ்ரீ
# இரதோற்சவ சிறப்பு



## பிரதம குருவின் ஆசியுரை



அம்பிகை அடியார்களே! தெய்வீக அருட்தலங்கள் பல விளங்கும் இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தின் தென்புறத்தே தீபகற்பத்தில் தனவந்தர்களும், கல்விமான்களும், சைவசீலர்களும், தமிழ்பற்றாளர்களும், விவசாயிகளும் நிரம்பி பல திருக்கோயில்கள் உள்ளதாற் சிறப்புற்று சைவ மணங்கமழும் புண்ணிய பூமியாம் வேலணைக் கிராமத்தில் பெருங்குளம் எனத் தலப்பெயர் கொண்டு அமைவுறும் பதியில் தாயாரின் கருணை வடிவாக சக்தியின் அருட்தோற்றமாக முத்துமாரி அம்மனாகக் கோயில் கொண்டு தன்னை நாடிவரும் அடியவர்களின் இன்னல், இடர்களைக் களைந்து அருள் ஆசி வழங்கும் அம்பாளின் இந்த வருட மகோற்சவ பெருவிழாவின் தேர் உற்சவ விழா 12.08.2011 இன்றைய தினம் சிறப்பாக இடம்பெறும். அவ்வேளையில் அடியார்கள் அனைவரும் தேர் வடம் பிடித்து இழுத்து வரும் அருள் காட்சியைக் கண்டு களித்து அம்பிகையின் திருவருள் ஆசி கிடைக்கப்பெற்று இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ முத்துமாரி அம்பிகையிடம் வேண்டுதலும் பிரார்த்தனையும் செய்வதோடு எனது நல்லாசிகளைக் கூறிக் கொள்கிறேன்.

''சர்வேஜனா சுகினோபவந்து''

ஆகமகலா சூரி ஆகமப்பிரலினா
சிவ ஸ்ரீ சுப்பிரமணிய வைத்தீஸ்வர

## ஆலய பரிபாலன சபையினரின் ஆசியுரை

வேலணை பெருங்குளத்தின் தென் கரையினிலே எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ முத்து மாரி அம்மனின் ஆலயம் தீவகத்திலே வரலாற்றுச் சிறப்பு மிக்க தலமாக விளங்குகிறது.

வடக்கே பெருங்குளத்துடன் அமரர் தில்லையம்பலம் ஞாபகார்த்த அமுதசுரபியும், கிழக்கே நால்வர் மடத்துடன் தீர்த்தக் கேணியும், தெற்கே மகா வித்தியாலயமும் விளங்க அமைதியான சூழலில் அன்னை தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டுள்ளார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றுடன் அழகிய மணி மண்டபத்துடன் கூடிய இராஜகோபுரமும் அமையப் பெற்று அழகுறக் காட்சியளிக்கும் அன்னையின் பெருமையோ அளவிடற்கரியதாகும்.

02.07.2010 இல் வாரி வழங்கும் அடியார்களின் ஒத்துழைப்பால் அம்மனின் ஆலயம் இராஜகோபுரத்திற்கான மகா கும்பாபிஷேக விழாவை நிகழ்த்தி புதுப்பொலிவுடன் காணப்படுவது அடியார்கள் மத்தியில் பரவசமூட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று அழகிய சித்திரத் தேரில் பவனிவரும் அன்னை அடியவர்களின் துயர் நீக்கி தனது அருட்கடாட்சத்தை அள்ளி வழங்குவார் என்பது எல்லோரதும் நம்பிக்கையாகும். எனவே அடியார்கள் யாவரும் தாயின் அருட் காட்சியைக் கண்டு களிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அம்மனைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்

ஆலயபரிபாலன சபையினர்.





## ஸ்ரீ முத்து
## ஆலய

இலங்கையில் தமிழர்கள் வழிபட்டுவரும் கோவில்களில் மிகப் புராதனமான கோவில்களில் வேலணையிலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலும் ஒன்று எனக் கருதப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்துப்பழைமையான பத்திரங்களில் இருந்து தொகுக்கப்பட்டு ஆங்கிலேயர் சேகரித்து வைத்திருக்கும் அரசாங்கக் கச்சேரிப் பதிவேடுகளிலே இந்தக் கோவில் பற்றிய குறிப்பு உள்ளது. அதிலிருந்து தற்போது இருக்கும் கர்ப்பக்கிரகம் 1875 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டதென அறிகின்றோம்.

ஆனால் இக்கோவில் எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது, எவ்வளவு காலமாக இருந்து வருகின்றது, என்ன வடிவத்தில், எந்த இடத்திலிருந்து தற்போது இருக்கும் இடத்திலேயே ஆதி கோவிலும் இருந்ததா? அன்றி வேறிடத்திலிருந்து தற்போதைய இடத்துக்கு மாற்றப்பட்டதா என்பது பற்றி அறிவதற்கு எமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. பண்டுதொட்டு இந்தக்கோயிலிலே மிருக பலியிட்டு வழிபடும் வழக்கமிருந்ததாக அரசாங்கக் கச்சேரிப் பதிவே[illegible] குறிப்புப் பகர்கின்றது. இந்த 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இவ்வழக்கம் இருந்ததாகப் பல முதியோர் நினைவுபடுத்திக் கொள்வார்கள். மிருக பலியிட்டும் குரவைக் கூத்தாடியும் தத்தம் குல தெய்வங்களை வழிபடும் வழக்கம் புரதான காலத்திருந்தே தமிழர்களிடமிருந்து வருகின்றது என்பதைச் சங்ககால நூல்களான திருமுருகாற்றுப்படை, புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் சான்று பகர்கின்றன. மேலும் இவ்வழக்கம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்மக்களிடையே இருந்து வந்ததாகவும் கூறுகின்றன. கானகத்தின் நடுவே ஒரு கல்லை நாட்டி அதன்முன் பலிவெட்டி , செங்குருதி கலந்த அரிசியைப்படைத்து அதைச்சுற்றி நின்று குரவைக் கூத்தாடி சாமி கலை எழுப்பி முருகனையும் முத்துமாரியையும் வழிபட்டார்கள். அந்த மிகப்பழைய காலத்திலேயே இப்பழக்கம் இருந்துள்ளது.

இந்த வகையிலே தான் எமது வேலணை முத்துமாரி அம்மன் வழிபாடும் மிகப்பழைய காலத்தில் எங்கோ ஒரு காட்டு மூலையில் ஏதோ ஒரு பெரிய மரத்தின் கீழ் ஆரம்பமாகியிருக்கவேண்டும் என்று நம்பக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கின்றன. நாளடைவில் தமிழரசர் காலத்திலே முத்துமாரியம்மன் விக்கிரத்தை கல்லில் வடித்துச் சிறிதாகவோ பெரிதாவோ ஒரு கோவிலமைத்து அதில் பிரதிஷ்டை செய்து நம்முன்னோர் வழிபாடு செய்து வந்திருக்கின்றார்கள். ஆகையினால் தான் ஒல்லாந்தர் காலத்திலிருந்து கர்ணபரம்

தேரேறிவரும் தேவியே சரணம்
*வேலணை பெருங்குளத்தின் கரையில்*
*வீற்றிருக்கும் –தாயே*
*வீறு கொண்டு உன் மக்களை காத்தருள்வாய்*
*கலைகளுக்கெல்லாம் அதிபதியான பராசக்தியே*
*சிவனின் உமையவளே வேண்டுகின்றோம் உன்*
*பாதகமலத்தில்*
*தேரேறி வரும் தேவியே உன் தரிசனம் காண*
*உலகம்*
*திரள்கின்றோம் எம்மை காத்தருள்வாயே தாயே*
*முத்துமாரி அம்மன் பாதங்கள் பணிகின்றோம்*
*சரணம் சரணம் சரணம்*
சிவா

நியூ பிரியங்கா ஜீவல்லர்ஸ்
New Priyanga Jewellers
Gexaike 22 Kt Jewellery
Manufacturing Jewellery
2G,Stanly Road,Jaffna.
T.P:-.021 222 5644
NO.69 ,Yarl Road (A9),Kilinochchi (Front Kachcheri).
T.P:-0213208611,0777175059

உலகளாவிய மற்றும் உள்ளூர் பொதிகள் சேவை
G.T.V.ENTERPRISES (PVT) LTD
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825
(சி-3664)

உதயா ஜீவல்லர்ஸ்
Uthayaa Jewellers
For Modern and Distinctive
No.81,Kasthuriar Road,
Jaffna.
இல.81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224434

யாழ். மைதில் நகைமாடம்
Maithely Nagai Madam
தங்க நகை வியாபாரி
89V, Kasthuriyar Road,Jaffna.
T.P:-.021 222 7902
79Z, Sea Street, Colombo-11
T.P:-.2396239

மலரமைப்பு:-இ. சிவநாதன்

அம்பாள் ரேடர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கண்ணன் வெதுப்பகம்
பஸ்கொம்பனியடி (குறிகட்டுவான் வீதி),
வேலணை.

கவியொளி மரத் தொழிலகமும்
விற்பனை நிலையமும்
கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
வங்களாவடி சிற்பனைவீதி,
வேலணை -6.
தொ.பே:-0217903210

கொமர்ஷல் வங்கியின்
பொற் கடன் அடகுச் சேவை
அதி கூடிய முதல் குறைந்த வட்டி
22 கரட்டுக்கு 36500/=
24 கரட்டுக்கு 40000/=
சிறப்புக் கருமபீடம் தேர்த்திருவிழா
இன்று நடைபெறும்
தங்க ஆபரணத்திற்கு அதி கூடிய முதல் வங்கி
மேலதிகப் பற்று வசதி உயர்ந்த இரகசியத் தன்மை
பாதுகாப்பு உறுதி குறைந்த வட்டி வீதம்
COMMERCIAL BANK
வேலணைக்கிளை

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய
# ...பு மலர் -12.08.2011





## ...துமாரியம்மன்
## ...ப வரலாறு

பரையான ஒரு கதையொன்று நம்பகமாக நிலவிவருகிறது.


ஒல்லாந்தர் கால நடுப்பகுதியளவில் பெருங்குடி வேளான் கட்டை மாதன் என்பவன் ஒருவன் வடகரையில் உலாவிவரும்போது கட்புலம் எனும் பகுதியில் நொச்சி, ஆவாரம் புதர் ஒன்றினுள் முத்துமாரியம்மன் கற்சிலை ஒன்றைக் கண்டெடுத்தான் என்றும் அதனைக் கட்டைமாதனும் ஊர்மக்கள் சிலருமாகச் சேர்ந்து அவ்விடத்திலிருந்து தூக்கிச் சென்று தற்போது கோவிலுள்ள இடத்திற்குத் தெற்கே நெடுங்கேணி எனும் ஒரு காணித்துண்டில் ஒரு குடிசையமைத்து அதனுள் சிலையை ஸ்தாபித்து வழிபட்டு வந்தார்கள் என்றும் அந்தக் கர்ணபரம்பரை வரலாறு பகிர்கின்றது. அவ்வாறாயின் அந்தப் பழைய கோயில் பெருங்குளத்தின் வடகரையிலிருந்ததா? அந்தக் கோவிலுக்கு என்ன ஆயிற்று?

இலங்கை வரலாற்றில் போர்த்துகேயர் படையெடுப்பால் இக்கோவில் இடிக்கப்பட்டு அம்மன் விக்கிரகத்தை காட்டினுள் வீசியிருக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு பயந்து அம்மனை வழிபட்ட பக்தர்கள் அம்மன் சிலை...தரில் மறைத்திருக்கலாம். காலம் செல்ல அவர்கள் இறக்க அம்மன் சிலையும் காலத்தால் மறைக்கப்பட்டிருக்கலாம்.பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டைமாதனால் குடிசையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பின் போர்த்துக்கேயரால் மறைக்கப்பட்டு மறக்கப்பட்ட அம்பாள் தன் இருப்பிடத்திலே திருப்தி கொள்ளாதவளாகி புங்குடுதீவைச் சேர்ந்த காசித் தம்பி என்ற வள்ளலின் உள்ளத்திலே புகுந்து தனக்குப் புதியதோர் திருக்கோவில் அமைக்கச் செய்தார். அதற்கமைய பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் காசித்தம்பி வள்ளல் தற்போது கோவிலுள்ள இடத்தில் அறுபது பரப்புக்காணி வாங்கி அம்பாளுக்கு மான்யமாக வழங்கி அதிலே கல்லினாலும் சுண்ண்ணாம்பினாலும் சிறு கோயில் எழுப்பி அங்கே நொச்சி, ஆவாரம்புதருள் கண்டெடுக்கப்பட்ட அம்மன் விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்து மக்கள் வழிபாட்டிறகுத் தேவையான பாங்குகளை அமைத்தார். அன்றுதொட்டு இன்றுவரை வேலணை பெருங்குளத்தின் தென்கரையில் ஸ்ரீ முத்துமாரியம்மன் நித்தம் தவம் புரிந்து நிற்கின்றாள்.

எனவே நாம் காணும் கோயிலுக்கு வயது 200 என்று வரலாற்று ரீதியாகக் கூற லாம்.அதற்கு முற்பட்ட வரலாற்றைப் பெறுவதற்கு ஆதாரங்கள் பெறமு டியா துள்ளது. இந்த 200 வருடகாலமாக அம்பாளின் திருக்கோவில் பல மாறுதல்ளை ஏற்று வளர்ச்சியுற்று வந்துள்ளது.

ஆதாரம்-வேலணை-ஒருவரலாற்றுஅறிமுக நூல்

## சித்திரத் தேர் வரலாறு



வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகும். இவ்வாலயத்திற்கு 1910 ஆம் ஆண்டளவில் கந்தர் வைரவநாதர் என்பவரால் ஒரு சித்திரக்கட்டுத்தேர் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அச் சித்திரத் தேர் பல காலமாக பாவிக்கப்பட்டு வந்தது. அச் சித்திரத்தேரை பாதுகாத்து வைப்பதில் ஏற்பட்ட தவறுகளினால் மழை, வெயில் பட்டு அழிவடையக் காரணமாகிவிட்டது. அப்போது இருந்த நிர்வாகம் இராமலிங்க உடையார் தலைமையிலாகும். இவ்வாலயத்திற்கு திருவிழா பட்சத்தில் வரும் வருமானங்களும் குறைவானதாகவே இருந்தது. அதனாலே இந்த ஆலயத்தை சிறப்பாக நிர்வகிப்பதற்கு கஷ்டங்கள் ஏற்பட்டன. இக் காலத்தில் தொண்டன் பிள்ளையான் அவர்கள் தோன்றி ஒவ்வொரு வீடுகளுக்கும் பிடி அரிசிக்குட்டான் கொடுத்து பிடியரிசி சேர்த்தும் ஊர் ஊராக திரிந்து கரம்பன், நாரந்தனை மற்றும் தீவின் பல பாகங்களுக்கு சென்று பணம் சேர்த்தும் ஒரு சகடை தேர் 1940 ஆம் ஆண்டு செய்யப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டு சுவாமி திருவிழாப்பட்சத்தில் தேரில் வருவதற்குப் பாவிக்கப்பட்டு வந்தது. பூசைக்கருமங்களுக்கு எண்ணெய் சேர்த்து ஆலய பூசைக்கருமங்களும் தொண்டன் பிள்ளையானால் ஆற்றப்பட்டது. தொண்டன் பிள்ளையானால் செய்யப்பட்ட சகடைத்தேரும் பாவிக்க முடியாத நிலை ஏற்பட முன்னர் 1968 ஆம் ஆண்டு அரசாங்க அதிபராக இருந்த எஸ்.சிவஞானம் தலைமையில் ஆலய மண்டபத்தில் புதிய தேர்த்திருப்பணிச்சபை அமைக்கும் நோக்கில் கூட்டம் நடைபெற்றது. அதில் கும்பிடும் மக்கள் அப்போதிருந்த தீவுப்பகுதி D.R.O விநாயகலிங்கம் அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் பங்குபற்றி **வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேர்த் திருப்பணிச்சபை** என்ற பேரில் சபைக்கு D.R.O விநாயகலிங்கம் அவர்கள் தலைவராகவும், திரு.ச. மாணிக்கவாசகர் அவர்கள் செயலாளராகவும், பொருளாளராக தி.ரு.வி.பி. கந்தையா அவர்களும், தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 25 உறுப்பினர்கள் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். D.R.O விநாயகலிங்கம் அவர்கள் இடமாற்றம் பெற்றுப்போக தொண்டன் தில்லையம்பலம் அவர்கள் தலைவராகச் செயற்பட்டு கிராமம் கிராமமாகச்சென்று (தொண்டன் தில்லையம்பலம் தலைமையில்) பணமாகவும், பொருளாகவும் சேகரித்து, கொழும்பு, தென்னிலங்கை ஊர்களுக்குச் சென்று பணம் சேகரித்தும் கொழும்பில் எஸ்.பி.சாமி தலைமையில் விளம்பர மலர் வெளியீட்டு நிகழ்ச்சி நடாத்தி பணம் சேகரித்தும் இச்சித்திரத்தேரிற்கு அரசாங்க அதிபர் எஸ்.சிவஞானம் ஆலோசகராக இருந்து இச் சித்திரத்தேர் செய்யப்பட்டு 1973 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் அரசாங்க அதிபர் சிவஞானம் தலைமையில் விடப்பட்டு இத்தேர் இப்போது பாவிக்கப்பட்டுவருகின்றது. இதற்குரிய பாதுகாப்பு மண்டபமும் அமைக்கப்பட்டு பொது மக்களின் ஒத்துழைப்புடன் தேர்வீதி சிரமதானம் மூலமும் அமைக்கப்பட்டும் வேலணைப் பெருங்குளம் முத்துமாரி அம்மனின் வரலாறு புதியதேர் என்ற ஓர் வரலாற்று மலர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வ.நவரத்தினம் அவர்களால் வரலாறு எழுதப்பட்டு நயினை அம்மன் கோயில் சிவ ஸ்ரீ கைலாசநாத குருக்கள் அவர்களால் 1973 ஆம் ஆண்டு தேர்த்திருவிழா அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

1973 ஆம் ஆண்டு தொடக்கம் அம்பிகையின் ஆலயத்தில் சகடைத்தேரும் புனரமைக்கப்பட்டு அம்மன், பிள்ளையார், கந்தசுவாமி ஆகிய மூன்று தெய்வங்களும் தேர்வீதி வலம் வந்துகொண்டிருக்கிறது. இந்த ஆலயத்திற்கு வரும் காலத்தில் ஆலய பரிபாலனசபை பிள்ளையாருக்கும், கந்தசுவாமிக்கும் புதிய சித்திரத்தேர்கள் செய்யப்பட வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

**திரு.ச.மாணிக்கவாசகர்,**
**செயலாளர் ,**
**தேர்த் திருப்பணிச்சபை (1968-1973),**
**ஓய்வுபெற்ற ஆசிரியர்.**

**கஜமுகன் மல்ரி சொப்**
விஜயன் வெதுப்பகம்
பிரதானவீதி, வங்களாவடி,
வேலணை.
எலக்கடிக்கல் பொருட்கள்,
கட்டடப் பொருட்கள்
தொ.பே:-0217903208

**சோபிகா புடைவையகம்**
இந்திரா பல்பொருள் வாணிபம்
குறிகட்டுவான் வீதி,
வங்களாவடி,வேலணை.
தொ.பே:-0217900921

**விமல் பல்பொருள் வாணிபம்**
வங்களாவடி சந்தி,
வேலணை.
தொ.பே:- 0775836531
உரிமையாளர்:-
மு.விமலேந்திரன்

**தினேக்கா கிறைண்டிங் மில்**
மிளகாய், மா, ஈரஅரிசி, தானியங்கள்
அரைத்தும் நெல் குற்றியும் தீட்டியும்
கொடுக்கப்படும் .
குறிகட்டுவான் வீதி,
வங்களாவடிச் சந்தி ,வேலணை.
தொ.பே:-0770444243

**ஜெயா அழகு மாடம்**
அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்
விற்பனையாளர்
149, நவீனசந்தை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212227589

**ரூபன் ஹாட்வெயார்ஸ்**
கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
தொ.பே:-0771684733

**சதீஸ்**
ஒலிப்பதிவு &
படப்பிடிப்பு கலையகம்
பஸ்நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0772487550, 0774219408
0770873636, 0212229466


**S.K.R.கொமினிகேசன் & புக் சென்ரர்**
குறிகட்டுவான் வீதி,
வங்களாவடி ,வேலணை.
T.p:-0776917157

**சண் சிற்றி பாமசி அன் குறோசறிஸ்**
உங்களுக்கு தேவையான சகல விதமான அனைத்து
பால்மா மருந்துகளுடன் ஊனமுற்றோருக்கான
ஊன்றுகோல்களும் மற்றும் வீல்செயர்(கொமட்) இங்கு
பெற்றுக்கொள்ளலாம்.
சிறுவர்களுக்கான சகலவிதமான
பொருட்களையும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல:518 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212223720

**மாரிமுத்து கட்டட**
**தொழில்நுட்ப நிலையம்**
இல 38, அச்சகவீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
கிளை :- வங்களாவடி, வேலணை.

வேலணையில் புதிய உதயம்
**நாகா ரெக்ஸ்**
குறிகட்டுவான் றோட்,
வங்களாவடி ,வேலணை.
தொ.பே:-0778559314

# நவீன எண் சோதிடம்



## இனிக்க இனிக்க பேசும் இவர்களுக்கு கற்பனாசக்தி அதிகம்

17

### உடல் எண்2 உயிர் எண் 6

2,11,20,29 போன்ற தேதியில் பிறந்தவர்களுடைய தேதி,மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால், இவர்கள் சந்திரன், சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் ஓரளவு உயரமாயும் கவர்ச்சியான முக அமைப்பும் பேச்சுத்திறனும் கொண்டவர்களாக விளங்குகின்றனர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் ஏதாவது ஒரு கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகிவிடுவர்.

கெட்ட பழக்கங்களைப் பழகாதிருத்தலும், முன்யாக்கிரதையாக இருத்தலும் அவசியம். கவர்ச்சியான நடை, உடை, பாவனைகள் இயற்கையிலேயே இவர்களுக்கு உண்டு. எளிதில் மற்றவர்களைக் கவர்வதிலும் நண்பராக்கிக் கொள்வதிலும் கை தேர்ந்தவராய் இருக்கின்றனர்.

எழுத்து, பேச்சு, வாதம் செய்தல் போன்றவைகளால் பொருள் சேர்க்கும் வாய்ப்புகள் உண்டு. சிலர் பெரிய வழக்கறிஞராகவோ, இஞ்சினியராகவோ, டாக்டராகவோ இருந்து பொருள் சேர்ப்பர். சிலர் எழுதுதல், பேரம்பேசுதல், மூலம் பொருள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

சேர்க்கும் தகுதி உடையவர்களாயிருக்கின்றனர்.

புகழ்ச்சிக்கு மயங்கும் இவர்கள் பிறர் தனது குறையை சுட்டிக் காட்ட முயன்றால், அவர்களை வெறுப்பர். இதனால், தன் குறைகளைத் தானே உணர்ந்து திருத்திக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் மனம் ஒரு நிலையில் இருக்காது. ஆனால், வேகமாக ஓடோடி உழைக்கும் இவர்கள் திடீரென்று மனந் தளர்ந்து நின்று விடுவர்.

உத்தியோகத்திலிருக்கும் சிலர் தன் வருமானம் போதவில்லை என்று வேறு ஏதாவது செய்து வரமானத்தைப் பொருக்க வேண்டும் என்று திட்டமிடுவர்.

இவர்களுக்குப் பெயர் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் பெரும் செல்வந்தராக வாழ்வர்.

இனிக்க இனிக்கப் பேசும் இவர்களுக்குக் கற்பனை சக்தி அதிகம். சுகமாகவும் எல்லா வசதி படைத்தவராகவும் வாழ வேண்டும் என்ற திட்டத்தோடுதான் இருப்பர்.

பொதுவாக இவர்கள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாவது கிடையாது. பெயர் நன்றாக அமைந்தவர்கள் வீடு, நிலம், வாகனம், தொழில் மூலம் வசதி படைத்தவர்களாயிருப்பர்.

**தொழில்**

இவர்களுக்குப் பச்சை நிறம் கொண்ட அனைத்தும் நல்ல லாபத்தைத்தரும். விவசாயம், இலை, காய்கறிகள், கான்ட்ராக்ட், அழகு சாதனங்கள், ஆபரணங்கள், வாசனைத்திரவியங்கள் போன்றவை இவர்களுக்கு உகந்தவையே. சிலா அரசாங்க உத்தியோகத்தில் இருந்தாலும் கூட்டு சம்பந்தாமான தொழிலில் ஈடுபட்டு பொருள் சேர்ப்பர்

**நோய்**

பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக பெயர் அமையாவிட்டால், கண் சம்பந்தமான வியாதி, மன வியாதி, வயிற்றுக் கோளாறு

**எண் கணித நிபுணர்**
**கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT**

போன்ற வியாதிகள் ஏற்படலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்கள் தமது பெயரை 15,24, 33,42,69 போன்ற எண்கள் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-7,6

யோகமான தேதிகள்- 7,16,25; 6,15,24

யோகமான மோதிரக்கல்- வைடூரியம்,ஜேட்,சந்திரகாந்தக்கல்

யோகமான நிறம்- வெளிர் நீலம், பச்சை

ஆகாத நிறம்- சிவப்பு, ஒரேஞ், ரோஸ்,கத்தரிப்பூ நீலம்

ஆகாத தேதிகள்-9,18,27

■ ■ ■


## பெயர் எண்களின் பலன்

**49 எண் பலன்**

இந்த எண் பெயரில் அமைந்தால் பல மக்களுக்கு தலைவனாகக் காட்சியளிப்பார். பலருக்கு வழி காட்டியாக வாழ்வதோடு, துணிந்து எந்தக்காரியத்திலும் இறங்கி வெற்றி பெறுவர். இவருடைய பெயர் எங்கும் பரவும். பல வீரதீரச் செயல்களும் செய்து காட்டுவர். சிறந்த பேச்சாளராகத்திகழ்வர். பல்வேறு வழிகளில் செல்வம் சேரும். பல மனிதனுடைய பிரச்சினைகளை தாங்கி நிற்பதால் திடீரென்று ஆபத்து வரும். ஆனால், 1,10,19,28 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணிக்கையில் பெயரை அமைத்துக்கொண்டால், மிக மேன்மையடைவர்.

**50 எண் பலன்**

இந்த எண் பெயராக அமைந்தவர்கள் சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் தனது திறமையாலும் புத்திக் கூர்மையாலும் உயர்ந்த நிலையை அடைவர். பல்வேறு மொழிகளைக் கற்றுக் கொள்வதோடு, நுணுக்கமான தொழிலாலும் பல



ருக்குப் போதிப்பதாலும் பொருளீட்டுவர். மனைவியால் பொருள் சேரும். எப்பொழுதும் யாரிடமாவது பேசிக்கொண்டே இருப்பர். பிரயாணத்தில் ஆர்வம் இருக்கும்.


**51 எண் பலன்**

புதன் ஆகிய 5 உம், சூரியனாகிய 1 உம் சேர்ந்து 51 எண் வருவதால், மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்படுவர். சூரியன் பிரகாசிப்பது போல பெரும் புகழை அடைவர். வியாபாரத்தாலும் பதவியாலும் பொருளும், புகழும் சேரும். இவர்களுடைய சிந்தனையெல்லாம் பணம் ஈட்டுவதிலேயே இருக்கும். எப்பொழுதும், ஏதாவது ஒரு திட்டம் தீட்டிக்கொண்டே இருப்பார். ஆரோக்கியமும் மனத் தைரியமும் இவர்கள் வாழ்க்கை உயருவதற்குக் காரணம். எப்பொழுதும் எதிர்ப்புக்கள் உண்டு. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாக 3,12,21,30, தேதியில் பிறந்தவர்களுக்கு மட்டும் இந்த எண் கெட்ட பலனை அதிகம் செய்யும்.

**52 எண் பலன்**

5 என்ற புதனும் 2 என்ற சந்திரனும் ஒன்று சேர்ந்து 52 எண் வருவதால், ஆரம்ப வாழ்க்கை மிகச்சிறப்பாக இருக்கும். வயது ஏறஏற முன்னேற்றம் கூடிக் கொண்டே இருக்கும். பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கும் பல்வேறு சிக்கலுடைய மனிதர்கள் இவர்களது உதவியை நாடுவர். அவர்களது சிக்கலைத் தீர்த்து வைப்பதால் பெயரும், புகழும் அடைவர். இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் 2, 11,20,29 தேதியில் பிறந்திருந்தால், பெரும் செல்வமும் கவர்ச்சியான நடை, உடை, பாவனையும் பெற்றுக் கடைசிவரை மகிழ்ச்சியுடன் வாழ்வார். மற்றைய தேதியில் பிறந்தவர்களுக்கு இந்த எண் பெயரில் வந்தால் எந்தக் காரியத்தையும் சரிவரச் செய்யவிடாது. குடும்ப வாழ்க்கை குழப்பமாகும்.

■ ■ ■



## கற்களும் நற்பலன்களும்

**வைடூரியம்**

வைடூரியம் பார்ப்பதற்கு பூனைக் கண்போன்று இருப்பதால் Cats Eye என்று பெயர்வந்தது. "வேப்பம்பழம் போல் கோத்தரமும் வெள்ளிக்கம்பிபோல சூத்திரமும்" கொண்ட நல்ல கல்லை அணிந்தால் 2 எண்காரர்களுக்கு நல்ல செல்வாக்கும் குன்றாத அதிர்ஷ்டமும் உண்டு. அத்தோடு தெய்வபலமும் மிகும். வைடூரியம் நன்றாக நூல் ஓடக் கூடியதாக இருக்க வேண்டும். விலை அதிகமானதே.

**வைரம்**

வைரம் அணிவது 5 எண்காரர்களுக்கு மட்டுமே சிறப்பாகும். மற்றவர்கள் அணிந்தால் நற்பலனை அழிக்காது. குற்றமற்ற வைரம் அணிவது நல்ல மகிழ்ச்சியையும் யோகத்தையும் வசீகரத்தையும் அளிக்கும். இதுவும் விலை உயர்வானவையே.

(தொடரும்)

# கைதியின் பணத்தை கொள்ளையிட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமறைவு

நீர்கொழும்பில் கைதியொருவரின் சொத்துக்களை கொள்ளையிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமறைவாகியுள்ளார்.

கைதி ஒருவரிடமிருந்து 20 இலட்ச ரூபா பணத்தையும் தங்க ஆபரணத்தையும் குறித்த பொலிஸ் உயரதிகாரி கொள்ளையிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை தேடுவதற்காக விசேட பொலிஸ் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

போலியான முறையில் குற்றச்சாட்டுக்களை சுமத்தி குறித்த நபரை தடுப்புக் காவலில் வைத்து பணம் மற்றும் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் முன்பிணை மனுவொன்றையும் நீர்கொழும்பு நீதிமன்றில் கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொள்ளையிடப்பட்ட பணம், தங்கம் மற்றும் இரத்தினக்கல் ஆபரணங்கள் மற்றுமொரு உயர்பொலிஸ் அதிகாரிக்குசொந்தமானது என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட சொத்துக்களை நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொள்ளையிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஓட்டமாவடியில் பூரண ஹர்த்தால்; கடைகள், அலுவலகங்கள் மூடல்

மட்டக்களப்பு- ஓட்டமாவடி பிரதேசத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இதனால் வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள் முற்றாக பூட்டப்பட்டு ...ழைச்சேனை ஓட்டமாவடி நாவலடி உட்பட பல பிரதேசங்களில் இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பொலிஸ் பொதுமக்கள் மோதலைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஹர்த்தாலை கல்குடா பள்ளிவாயில்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

நேற்று முன்தினம் மர்ம மனிதன் எனப்படும் நபரொருவர் 31 வயதுடைய பெண்ணின் கையைப் பிடித்து இழுத்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட முறுகலினால் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே பாரிய மோதல்கள் ஏற்பட்டன.

இதனால் 25 பொது மக்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலையே காணப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# ராஜ் ராஜரத்தினம் மீதான 14 குற்றச்சாட்டுகள் நிரூபணம்

வர்த்தக இரகசியங்களை முறை...டாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை கோடீஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரத்தினம் மீது சுமத்தப்பட்டுள்ள அந்நிய செலாவணி உள்ளிட்ட 14 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் அவர் குற்றவாளி என நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி அவருக்கான தண்டனை அறிவிக்கப்படும் வரை பிணையில் விடுதலையாகியிருக்கும் ராஜரத்தினம் வீட்டுக் காவில் வைக்கப்படுவார் என தெரிய வருகிறது.

ராஜரத்தினத்திற்கு 20 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

ராஜ் ராஜரத்தினம் கைது செய்யப்பட்டுள்ள 5 மாதங்களின் பின்னர் கடந்த மார்ச் 8 ஆம் திகதி அவருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதேவேளை அவருக்கு குறைந்தபட்ச தண்டனையை வழங்குமாறு ராஜ் ராஜரத்தினத்தின் சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். மிக நீண்டகால சிறை தண்டனையானது மரண தண்டனைக்கு ஈடானது என சட்டத்தரணி சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# இறுதி நிலை பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பரீட்சைத் திணைக்களத்தினூடாக ஆண்டு தோறும் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இறுதிநிலை பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இவ் ஆண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் உள்ள இந்துக் குருமார் ஒன்றிய (குருகுலம்) மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதற்கான கடிதங்கள் விண்ணப்பித்த அறநெறிப்பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் இக் கருத்தரங்கிற்கு விண்ணப்பிக்கத் தவறியவர்களும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்வதன்மூலம் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியும் என பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# 2011.08 12 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1281-மொங்கோலியப் பேரரசன் குப்ளாய்கானின் கடற்படைகள் ஜப்பானை அணுகும்போது சூறாவளியில் சிக்குண்டு உயிரிழந்தனர்.

★ 1480-ஒட்டோமான் படையினர் இஸ்லாம் மதத்திற்கு மாற ஒப்புக் கொள்ளாத 800 கிறிஸ்தவர்களை தலையை சீவிக் கொன்றனர்.

★ 1499-வெனிசியர்களுக்கும் ஒட்டோமான் துருக்கியர்களுக் கும் இடையில் முதற்போர் இடம் பெற்றது.

★ 1833-சிக்காக்கோ அமைக்கப்பட்டது.

★ 1851-ஐசாக் சிங்கர் தனது தையல் இயந்திரத்துக்கான காப்புரி மம் பெற்றார்.

★ 1853-நியூசிலாந்து சுயாட்சி பெற்றது.

★ 1877-அசாப் ஹோல் என்பவர் செவ்வாய்க்கோளின் டெய் மோஸ் என்ற சந்திரனைக் கண்டுபிடித்தார்.

★ 1883-கடைசி குவாகா (வரிக் குதிரை வகை) ஆம்ஸ்டர் டாமில் உயிரிழந்தது.

★ 1914-முதலாம் உலகப் போர்: பிரித்தானியா ஆஸ்திரியா- ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. பிரித்தானிய இராச்சியத்தின் அனைத்து குடியேற்ற நாடுகளும் இதனுள் அடங்கின.

★ 1952-மொஸ்கோவில் 13 யூத இன அறிவியலாளர்கள், கவிஞர்கள் கொல்லப்பட்டனர்.

★ 1953-சோவியத் ஒன்றியம் ஜோ 4 என்ற தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை நடத்தியது.

★ 1960-எக்கோ 1 என்ற முதலாவது தொலைத் தொடர்பு செய்மதி ஏவப்பட்டது.

★ 1964-இனவெறிக் கொள்கை காரணமாக தென்னாபிரிக்கா ஒலிம் பிக்கில் விளையாடத் தடை செய்யப்பட்டது.

★ 1978-ஜப்பானும் மக்கள் சீனக் குடியரசும் தமக்கிடையே நட் புறவு அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.

★ 1981-ஐ.பி.எம்.தனி மேசைக் கணனி வெளியிடப்பட்டது.

★ 1985-ஜப்பானில் இரண்டு பயணிகள் விமானங்கள் மோதிக் கொண்டதில் 520 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் காப்பாற்றப்பட்டனர்.

★ 1990-வீரமுனைப் படுகொலைகள் 1990 அம்பாறை வீரமுனையில் நானூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1990-அமெரிக்கா தென் டகோட்டாவில் டிரன்னொசோரஸ் என்னும் டைனசோரின் முழுமையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது.

★ 2000-கே.-141 கூர்ஸ்க் என்ற ரஷ்யக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சியின் போது 118 பேருடன் பாரெண்ட்ஸ் கடலில் மூழ்கியது.

★ 2005-இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில் நீச்சல் தடாகத்தில் நீராடும் போது சுடப்பட்டு அடுத்த நாள் இறந்தார்.

★ 2005-மாலைதீவுகளில் அரசுக்கெதிராக கிளர்ச்சி இடம்பெற்றது.

★ 2005-இலங்கையின் தமிழ் வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா கொலை செய்யப்பட்டார்.

★ 2006-இலங்கையின் புத்திஜீவிகளில் ஒருவரான கேதீஸ் லோகநாதன் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1887-எர்வின் சுரோடிங்கர், ஆஸ்திரிய இயற்பியலாளர் (இ.1961)

★ 1924-ஸியா உல் ஹக், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ.1988)

★ 1971-பீட் சாம்ப்ரஸ், அமெரிக்க டென்னிஸ் வீரர்

### இறப்புக்கள்

★ கி.மு 30- கிளியோபாட்ரா (பி.கி.மு.69)

★ 1848-ஜோர்ஜ்.ஸ்டீவன்சன், தொடரூந்து கண்டுபிடித்தவர் (பி.1781)

★ 1955-தோமஸ் மான், ஜேர்மனிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1875)

★ 1955-ஜேம்ஸ் சம்னர், அமெரிக்க வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1887)

★ 1964-இயான் பிளெமிங், ஆங்கில இதழியலாளர், எழுத்தாளர் (பி.1908)

★ 1973-வால்டர் ஹெஸ், சுவிஸ் மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1881)

★ 1973-கார்ள் சைக்ளெர், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1898)

★ 1979-ஏர்ண்ஸ்ட் போரிஸ் செயின், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1906)

★ 1989-வில்லியம் ஷாக்லி, அமெ க்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி.1910)

### சிறப்பு நாள்

★ சர்வதேச இளைஞர் தினம்

18. ஒரு குடும்பத்தில் 3 பிள்ளைகள் உள்ளனர். நிமலைவிட சுனில் மூத்தவர். கமல் சுனிலைவிட வயதில் குறைந்தவராயினும் நிமலைவிட வயதில் மூத்தவர். இவர்களை வயதுகளின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் வரும் பெயர்களின் வரிசை யாது?
1. சுனில், கமல், நிமல்
2. நிமல், கமல், சுனில்
3. கமல், நிமல், சுனில்

19. என் அம்மா அப்பாவைவிட 10 வயது குறைந்தவர். எனது வயதின் இரு மடங்கு வயது அம்மாவுக்கு. எம் இருவரது வயதுகளின் கூட்டுத் தொகை 60 எனின், அப்பாவின் வயது என்ன?
1. 50 வயது 2. 60 வயது 3. 40 வயது

20. புகையிரதம் ஒன்றில் எப்போதும் இருக்கக்கூடியவற்றை உள்ளடக்கிய விடை எது?
1. இருக்கைகள், பிரயாணிகள், தண்டவாளம்
2. மிதிபலகை, இருக்கைகள், ஒலிபெருக்கி
3. இருக்கைகள், மிதிபலகை புகையிரதப் பெட்டிகள்

21. வீடொன்றில் எப்போதும் இருக்கக் கூடியவற்றை உள்ளடக்கிய விடை எது?
1. கதவு, யன்னல், அறைகள்
2. கூரை, வாசல், சுவர்
3. வாசல், படிக்கட்டு, கதவு

♦ சுவேதா சுற்றாடல் பாடத்திலும் கணித பாடத்திலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 120 ஆகவும் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகை 130 ஆகவும் சுற்றாடல், கணிதம், ஆங்கிலம் ஆகிய 3 பாடங்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 180 எனவும் கொண்டால்,

22. சுவேதா கணிதத்தில் பெற்ற புள்ளிகள் எத்தனை?
1. 100 2. 80 3. 70

23. சுற்றாடலிலும், ஆங்கிலத்திலும் அவள் பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
1. 110 2. 130 3. 150


♦ பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A E L R W எனும் எழுத்துக்களுக்கு அதே ஒழுங்கிலன்றி 1 3 5 7 9 எனும் இலக்கங்கள் இடப்பட்டு அவை ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

WALL = 1 3 3 7 WEAR = 1 5 7 9

24. ற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?
1. 1 2. 3 3. 7


25. 9 என்ற இலக்கம் கொடுக்கப்பட்டிருப்பது எந் எழுத்துக்குப் பதிலாக ஆகும்.
1. A யிற்கு 2. W இற்கு 3. E இற்கு


26. பின்வரும் எண்கோலத்தில் வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண் எது?





1. 50 2. 29 3. 25

♦ தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவை தெரிவுசெய்க.


27.



28.




♦ பின்வரும் உருக்களை ஒழுங்குபடுத்தும்போது வரும் சம்பவத்தைச் சரியாக காட்டும் எழுத்துக்களின் வரிசையைத் தெரிவுசெய்க.

29.



1. DABC 2. BCAD 3. CADB

30.



1. ABDC 2. DBAC 3. CABD

31.



1. ACBD 2. BCAD 3. BACD

♦ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்யவேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க

32. இரவில் குளத்தில் பூத்த வெண்டாமரை மிக அழகாக இருந்தது.
1. வெண்டாமரை என்பதற்குப் பதிலாக செந்தாமரை என எழுதுதல்
2. குளத்தில் என்பதற்குப் பதிலாக ஆற்றில் என எழுதுதல்
3. இரவில் என்பதற்குப் பதிலாக காலையில் என எழுதுதல்

33. கொல்லன் களிமண்ணைக் குழைத்து மட்பாண்டங்கள் செய்தான்.
1. மட்பாண்டங்களுக்குப் பதிலாக ஆயுதங்கள் என எழுதுதல்.
2. கொல்லன் என்பதற்குப் பதிலாக குயவன் என எழுதுதல்.
3. களிமண் என்பதற்குப் பதிலாக மணல்மண் என எழுதுதல்.

♦ பின்வரும் பாடலை வாசித்து 34ஆம், 35ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்க.

கழுத்தில் காதில் நகையணிந்து
கைகளில் பூங்கொத்தைச் சுமந்து
மழைக்காலத்தில் காட்டுராணி
மணப்பெண்ணாக மாறுகின்றாள்.

34. இங்கு மணப்பெண் எனக் குறிப்பிடப்படுவது.
1. மழையை 2. பூக்களை 3. காட்டை

35. இப்பாடலில் கூறப்படும் உட்கருத்தாக இருப்பது.
1. மணப்பெண் கழுத்தில் காதில் நகை அணிவாள்.
2. மழை பெய்யும்போது காட்டு மரங்கள் செழிப்படையும்.
3. மழைக்காலத்தில் காடுகளில் திருமணங்கள் நடைபெறும்.

36. இலேசான மழை பெய்த பின்னர் பெருந்தெருக்களில் நடைபெறக்கூடிய விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாகும். இதற்குக் காரணம்
1. பெருந்தெருக்கள் பனியால் மூடப்படுதல்.
2. பெருந்தெருக்களில் வழுக்கும் தன்மையுடையதாக மாறுவதால்
3. பெருந்தெருக்களில் வாகனங்கள் அதிவேகமாகப் பயணம் செய்வதால்

37. ஒரு நாளில் இரு தடவையாவது நாம் பல்துலக்க வேண்டும். இதற்குக் காரணம்
1. சிரிக்கும்போது பற்கள் பளிச்சென்று தெரிவதற்காக.
2. பல்துலக்குவது மிகச் சிறந்த பழக்கம் என்பதற்காக.
3. பற்களின் பாதுகாப்புக்கு அது மிகவும் சிறந்தது என்பதற்காக.

38. நாம் எப்போதும் கொதித்தாறிய நீரையே பருக வேண்டும். இதற்குக் காரணம்
1. தடிமல் இருமல் வராமல் தடுப்பதற்கு சூடான நீர் உதவும் என்பதால்.
2. கொதித்தாறிய நீர் மிகச் சுவையானது என்பதால்.
3. கொதிக்கும்போது நீரில் உள்ள கிருமிகள் அழிக்கப்படும் என்பதால்.

♦ சிறுவனொருவன் தனது வீட்டிலிருந்து நண்பனின் வீட்டுக்குச் செல்லும்போது கடந்து சென்ற இடங்களின் விபரம் வாக்கியங்களில் தரப்பட்டுள்ளது.

* தபால் நிலையத்தைக் கடந்தது பொலிஸ் நிலையத்தைக் கடக்க முன்னராகும்.
* தபால் நிலையத்தைக் கடப்பதற்கு முன்னால், பாடசாலையைக் கடந்திருந்தான்.
* வைத்தியசாலையைக் கடந்தது பொலிஸ் நிலையத்தைக் கடந்த பின்னாலாகும்.

39. மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. அவனது வீட்டிலிருந்து பாடசாலை மிகத் தூரத்தில் உள்ளது.
2. தபால் நிலையத்தைத் தாண்டியவுடன் நண்பனின் வீட்டை அடைய முடியும்.
3. வைத்தியசாலை நண்பனின் வீட்டுக்கு அருகாமையில் உள்ளது.

40. தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
1. பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் வைத்தியசாலை உள்ளது.
2. தபால் நிலையத்திற்கு அருகாமையில் பாடசாலை அமைந்துள்ளது.
3. பொலிஸ் நிலையத்திற்கும், வைத்தியசாலைக்கும் இடையே தபால் நிலையம் உள்ளது.

**(கடந்த 2011.08.10 இற்குரிய வினாக்களில் 10 ஆம் வினாவில் சிறிய திருத்தம் ஏற்பட்டுள்ளது. அத் திருத்தம் கீழே தரப்பட்டுள்ளது.)**

| 2011 - 06 - 30 | | | |
|---|---|---|---|
| அளவு | விபரம் | ரூ. | ச. |
| 500 கிராம் | மாரி பிஸ்கட் | 140. | 00 |
| 1 போத்தல் | பழப்பாகு | 160. | 00 |
| 4 ½ கிலோ கிராம் | அரிசி | 306. | 00 |
| 3 லீற்றர் | தேங்காய் எண்ணெய் | 660. | 00 |
| | | 749. | 00 |

# மலையகத்தில் தொடரும் மர்ம மனிதர்களின் பதற்றம்

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கொழும்பு)

மலையகத்தில் மர்ம மனிதர்கள் நடமாடுவதாக தெரிவிக்கப்படுகின்ற தகவல்களால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலப்பட தோட்டப்பகுதியில் பெண் ஒருவரைத் தாக்க முற்பட்ட நபரொருவரை பிரதேச மக்கள் பிடித்து நாவலப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினமிரவு நாவலப்பிட்டி நகரசபைக்கு உட்பட்ட பெனிதுட்டுமுல்ல, ஓவிட்ட, சொய்சாகலை பிரதேசங்களில் மர்ம மனிதர்கள் நடமாடுவதாக தகவல்கள் வெளியாகியதைத் தொடர்ந்து நாவலப்பிட்டி பொலிஸாரும் பிரதேச மக்களும் ஒன்றிணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

அத்துடன் பொகவந்தலாவை, நோர்வூட், மஸ்கெலியா போன்ற பிரதேசங்களிலும் நேற்று முன்தினம் மர்ம மனிதர்கள் நடமாடுவதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து பிரண்டித மக்கள் மத்தியில் பதற்ற நிலைமை காணப்பட்டது.

மேலும் மலையத்தில் பல்வேறு பகுதிகளில் மர்ம மனிதர்களின் ஊடுருவல் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்ற தகவல்களைத் தொடர்ந்து தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதைத் தவிர்த்து வருவதோடு நகரப் பகுதிகளுக்கு வருவதிலும் அச்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஹற்றனில் கிறீஸ் மனிதனை கைதுசெய்ய விசேட அதிரடிப்படை

பதுளை, மொனராகலை, கண்டி, பொலநறுவை போன்ற இடங்களில் கிறீஸ் மனிதர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் பயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மலையகம், ஹற்றன் பிரதேசத்தில் அதிரடிப் படையின் மூன்று பிரிவுகள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களை பீதிக்கு உள்ளாக்கும் சில மனிதர்கள் பெண்களை துன்புறுத்துவதாகவும் அவர்களின் உடமைகளை கொள்ளையடிப்பதாகவும் முறைப்பாடுகள் அண்மைக்காலமாக தெரிவிக்கப்பட்டு வந்தன.

உடம்பில் கிறீசை பூசிய மனிதர்களே இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் செய்திகள் வெளியாகின.

பதுளை, மொனராகலை, கண்டி, பொலநறுவை போன்ற இடங்களில் குறித்த கிறீஸ் மனிதர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் பயம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இரத்தினபுரி காவத்தை பிரதேசத்தில் சில வயோதிப் பெண்கள் கொல்லப்பட்டமையை அடுத்தே கிறீஸ் மனிதனின் கதை வெளியானது.


இது தொடர்பில் மூன்று பேர் பின்னர் கைது செய்யப்பட்டனர். எனினும் அதற்கு பின்னர் கிறீஸ் மனிதர்களைப் பற்றி செய்திகள் வெளியாகின்ற போதும் யாரும் கைது செய்யப்படவில்லை. எனவே இந்த கிறீஸ் மனிதன் என்ற செய்தி வதந்தி என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் பயம் காரணமாக தமது பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வரும் புதிய வர்களை குறிப்பாக சிங்களவர்களை கிறீஸ் மனிதர்கள் என்று கூறி தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் பிடித்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதன் பின்னர் ஹற்றன் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மர்ம மனிதர்கள் தொடர்பில் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஸ்ரீரங்கா எம்.பி.வலியுறுத்தல்



மர்ம மனிதர்கள் தொடர்பான சம்பவங்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் பிரஜைகள் முன்னணியின் செயலாளர் நாயகமுமான ஸ்ரீரங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வரும் மர்ம மனிதர்கள் குறித்து அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிலர் வேண்டுமென்றே மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான வதந்திகளை பரப்புபவர்களாக இருப்பின் அவர்களை கண்டறிந்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவசர காலச் சட்டம் மேலதிக வாக்குகளினால் மேலும் ஒரு மாதத்தினால் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான சம்பவங்களின் சூத்திரதாரிகளை கூட அதன் ஊடாக கைது செய்ய முடியாமை அவசரகால சட்ட அமுலாக்கம் அர்த்தமற்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது கடினமான விடயமல்ல.

எதிர்க்கட்சியில் இருக்கும் பிரஜைகள் முன்னணி மக்களின் ஆதங்கங்களை பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் ஒலிக்கச் செய்கின்ற போதிலும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியபொறுப்புஅரசாங்கத்திற்கே உரித்தானது எனக் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் புதிய அலுவலகம் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான அலுவலகம் கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான யுனிசெப் அமைப்பின் வதிவிடப்பிரதிநிதி, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான அலுவலகம் இதுவரைகாலமும் கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு அலுவலகத்தில் இயங்கி வந்த நிலையிலேயே நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் திறக்கப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக உதவித் தொகை வழங்கி வைக்கப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வடமாகாண இணைப்பாளர் எஸ்.சி.எஸ். இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மாதாந்தம் உதவித் தொகை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தாய் அல்லது தந்தையை இழந்த சிறுவர்கள் 3 ஆயிரத்து 329பேரும்தாய்,தந்தையை இழந்தசிறுவர்கள் 514 பேரும் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# உலகசாதனை படைக்க இலங்கை இளைஞர்களுக்கு அரிய வாய்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வதேச இளைஞர் வருடத்தை கொண்டாடும் வகையில் கொழும்பு பிரிட்டிஷ் கவுன்சில் இலங்கை இளைஞர்களை கொண்டு உலக சாதனையொன்றை நிலைநாட்ட தீர்மானித்துள்ளது. உலக சாதனையை நிலை நாட்ட விரும்பும் இளைஞர்கள் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு பல்கலைக்கழக விளையாட்டுத்திட மைதானத்திற்கு பிற்பகல் ஒரு மணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அனுமதி இலவசமாகும். சுமார் ஆயிரத்து 500 இளைஞர்களை நிற்கவைத்து எழுத்து வடிவிலான கோலம் அமைக்கப்படும்.

இந்த மனிதர்களின் கோலத்தை விமானத்திலிருந்து படம் எடுப்பார்கள்.

ஏற்கனவே இந்த சாதனை பிரான்ஸ் நாட்டில் ஆயிரத்து 250 இளைஞர்களின் உதவியுடன் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இலங்கை இளைஞர்களின் இந்த உலக சாதனை திட்டத்தை அவதானிப்பதற்காகவும் அதனை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்வதற்காகவும் வெளிநாட்டு பிரதிநிதிகளையும் கொண்ட குழுவொன்று இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஜனவரி முதல் பொலிஸாருக்கு தமது பெயர் பொறித்த சின்னம்

(கொழும்பு)

அடுத்த வரும் சகல பொலிஸாருக்கும் தத்தமது பெயர் பொறித்த பொலிஸ் சின்னங்களை வழங்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் தனித்தனியே அவரவர் பெயர் பொறித்த சின்னங்கள் வழங்கப்படும்.

அவற்றையே தமது கடமை நேரத்தில் அவர்கள் அணிய வேண்டும் எனவும் இது அவர்களது சீருடையின் ஓர் அங்கமாகக் கருதப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)







வடமாகாண முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டு விழா நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் சிறார்களின் இசையும் அசைவு நிகழ்வையும் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா சிறார் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்.)

# தமிழக சட்டப் பேரவைத் தீர்மானங்கள் இலங்கையை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன

## சீமான் தெரிவிப்பு



ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய அளித்த சிறப்பு நேர்காணலில் முதலமைச்சர் ஜெயலலிதா பற்றி வழங்கியுள்ள பதில்கள், இலங்கை அரசுக்கு எதிரான தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதையே காட்டுகின்றது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக முதல்வர் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதெல்லாம் அரசியல் ஆதரவைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சி. உண்மைகளை அறியாமல் நிறைவேற்றப்பட்ட அர்த்தமற்ற தீர்மானங்கள்.

ஜெயலலிதாவிற்கு தமிழர்கள் மீது அக்கறை இருக்குமானால் இலங்கையின் கடற்பரப்பிற்குள் வந்து தமிழ் நாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பதை தடுத்து நிறுத்தட்டும். அதை அவர் முதலில் செய்ய வேண்டும் என்று கோத்தபாய கூறியுள்ளார்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கிறார்கள். இது இலங்கை தமிழ் மீனவர்களைப் பாதிக்கிறது என்கிறார். இதில் உண்மை என்னவெனில் இந்திய கடற்பகுதிக்கு வந்து மீன்பிடித்ததாக இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட 70 இற்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர்.

ஏதோ தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடிப்பதால் ஈழத்தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது போல் கோத்தபாய ராஜபக்ச பேசியுள்ளார்.

ஆனால் ஈழத்தமிழர் மீனவர்கள் ஆழ்கடலிற்கு வந்து மீன்பிடிக்க முடியாத வகையில் அவர்களை குறைந்த தூரத்திற்கு மட்டுமே கடலில் சென்று மீன்பிடிக்க இலங்கை அரசு அனுமதிக்கிறது.

அவர்கள் நீண்ட தூரம் சென்று மீன்பிடிக்க முடியாத அளவிற்கே டீசல் வழங்குகிறது. தமிழர்கள் அவர்கள் வாழ்ந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும். மறுவாழ்வு தரப்பட வேண்டும். அது தான் முக்கியமானது. அதை விட்டுவிட்டு போர்க்குற்றம் என்றெல்லாம் சத்தமிடுவது எந்தப் பயனையும் தராது என்று கோத்தபாய கூறியுள்ளார். இவர் தமிழக முதலமைச்சர் சட்டப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை சரியாக படிக்கவில்லை என்பது தெரிகிறது.

போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னமும் தமிழர்கள் முகாம்களிலேயே உள்ளனர். அவர்கள் வாழ்ந்த இடங்களில் மீண்டும் குடியேற்றம் செய்யப்படவில்லை. அவர்களுக்கு தேவையான உதவிகளையும் இலங்கை அரசு செய்யவில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை அளிக்க மறுத்து வருகிறது. எனவே அந்நாட்டு அரசுக்கு எதிராக மற்ற நாடுகளுடன் இணைந்து பொருளாதாரத் தடை கொண்டு வர வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கோருகின்றது.

இத்தீர்மானம் குறித்து விளக்கமளித்த ம.தி.மு.க முதல்வர் கூட இலங்கை அரசை வழிக்கு கொண்டு வரவே பொருளாதார தடை அவசியமாகின்றது என்று கூறினார்.

அது மட்டுமல்ல போர் முடிந்த பிறகும் இலங்கையில் தமிழர்கள் எப்படிப்பட்ட அடக்கு முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையெல்லாம் தமிழக முதலமைச்சர் நன்றாகவே அறிந்துள்ளார்.

அதனால் தான் அங்கு அமைதி திரும்பி விட்டது என்று பறைசாற்ற விரும்பும் இலங்கை அரசு சூழ்ச்சியுடன் நிறைவேற்ற முற்பட்ட கொழும்பு, தூத்துக்குடி கப்பல் போக்குவரத்தை நிறுத்த வேண்டும் என்று தனது கட்சியின் சார்பாக தீர்மானம் நிறைவேற்றினார்.

தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானங்களால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை என்று கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் விளைவே இலங்கைக்கு எதிராக நிதித் தடை கொண்டு வரவேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற அயலுறவுக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஆகும்.

அது மட்டுமின்றி இலங்கையில் இடம்பெற்ற போர் குறித்து பன்னாட்டு விசாரணைக்கு உத்தரவிடவேண்டுமென்று கோரி அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் அளிக்கப்பட்டுள்ளது.

அது நிறைவேறினால் ஐ.நா.பாதுகாப்பு பேரவையிலேயே இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை ஆரம்பிக்க தீர்மானம் கொண்டு வரும் நிலை ஏற்படும்.

விரைவில் அந்நாட்டு அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை தொடங்கும். அதில் ஈழத்தமிழர்களை இலங்கை அரசு இனப்படுகொலை செய்தது உறுதியாகும் என்றார்.

(ஸ்ரீ-2)

# லண்டனில் கலவரம் ஓய்ந்தது; ஏனைய பகுதிகளில் வன்முறை

(லண்டன்)

பிரிட்டனின் தலைநகர் லண்டனில் கலவரம் குறைந்து அமைதி திரும்புகிறது. எனினும் அந்நாட்டின் ஏனைய பல நகரங்களில் நேற்று முன்தினம் நான்காவது நாளாக கொள்ளை, தீ வைப்பு, தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தன.

இதையடுத்து கலவரக்காரர்கள் மீது இறப்பர் குண்டுகள், தண்ணீர், பீரங்கித் தாக்குதல் பயன்படுத்த பிரதமர் டேவிட்கமரூன் அனுமதி அளித்துள்ளார்.

லண்டனில் ஆரம்பமாகிய இக் கலவரம், பிர்மிங்காம், நாட்டிங்காம், பிரிஸ்டல், லிவர்பூல், மான் செஸ்டர், லீசெஸ்டர் சால்போர்டு, வெஸ்ட் ப்ரோம்விச், வொல்வர்ஹேம்ப்டன், க்ளவ்செஸ்டர் ஆகிய நகரங்களுக்கு பரவியது.

இந்நகரங்களில் உள்ள மார்க் அண்டு ஸ்பென்சர் சோனி போன்ற பிரபல கடைகள் கலவரக்காரர்களால் சூறையாடப்பட்டன. பொலிஸ் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கலவரக்காரர்கள் தாக்கியதில் இதுவரை 111 பொலிஸார் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையில் லண்டனில் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் அமைதியை நிலைநாட்டியுள்ளனர். கலவரம் ஆரம்பமாகிய கடந்த 6 ஆம் திகதி முதல் இதுவரை ஆயிரத்து 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இளைஞர்கள் என்பதோடு இவர்களில் இளம் பெண்களும் உள்ளனர். லண்டனின் பல பகுதிகளில் மக்கள் தங்கள் வீடுகள், கடைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சவுத்ஆல் பகுதியில் உள்ள குருத்வாராக்கள், மசூதிகளைப் பாதுகாக்கும் பணியில்



ஆயுதம் ஏந்திய சீக்கியர்கள் ஈடுபட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 786 பேர் லண்டனில் மட்டும் கைதானவர்கள். இவர்கள் அனைவர் மீதான வழக்குகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பிரதமர் டேவிட் கமரூன் நேற்று முன்தினம் அவசரகால அமைச்சரவைக் கூட்டத்தைக் (கோப்ரா) கூட்டி ஆலோசித்தார். பின் பொலிஸ் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதன் பின் கலவரக்காரர்களை அடக்க இறப்பர் குண்டுகள், தண்ணீர் பீரங்கித் தாக்குதல் போன்றவற்றுக்கு அனுமதி அளித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில்,

கலவரக்காரர்களைத் திருப்பித் தாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. திருப்பித் தாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அவர்களை அடக்க உறுதியான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

கடைகளுக்குள் புகுந்து கொள்ளையடித்தவர்கள், அங்குள்ள சி.சி.டி.வி. கமராக்களில் பதிவான காட்சிகள் மூலம் அடையாளம் கண்டறியப்பட்டு கைது செய்யப்படுவர். சட்டத்தில் கடுமையான தண்டனை அவர்களுக்குக் காத்திருக்கின்றது என்றார்.

இதற்கிடையில் பிர்மிங்காமில் கார் ஒன்று மோதியதில் ஆசியாவைச் சேர்ந்தமூன்று பேர் பலியாகியுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஒசாமா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் திரைப்படமாகின்றது



அல்கொய்தா பயங்கரவாதி ஒசாமா பின் லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையும் அது தொடர்பான விசாரணையையும் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட அமெரிக்க நாடாளுமன்ற எம்.பி. திட்டமிட்டுள்ளார்.

நியூயோர்க்கைச் சேர்ந்த நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை உறுப்பின ரான பீட்டர்கிங் இந்தத் திரைப் படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். இவர் தற்போது பின் லேடன் தேடப்பட்டு சுட்டுக் கொல் லப்பட்டது தொடர்பாக விசாரிக் கப்பட்டு வரும் அமெரிக்கா வின் ஹோம்லாண்ட் பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருக்கிறார்.

பின்லேடன் மீது தாக்குதல் நடத்தியது குறித்தும் அதற்காக அமெரிக்கா வகுத்த வியூகம் குறித்தும் இந்தத் திரைக்கதையை அமைத்துள்ளனர். இதை பிரபல ஹொலிவுட் இயக்குநர் கேத்ரின் பிக்லோ இயக்குகிறார். திரைக்கதையை மார்க்போல் எழுதுகின்றார்.

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ அதிகாரிகளைச் சந்தித்து பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பின்லேடன் மீதான ஆபரேஷன் ஜெரோனிமோ குறித்தும் ஆலோசனை நடத்தினார் பீட்டர் சிங்.

மேலும் இராணுவ தலைமையகமான பென்டகனினிலிருந்து நேவிசீல் ஆபரேஷனின் நடவடிக்கைகள் எப்படி முன்கூட்டியே கசிந்தது என்பது குறித்தும் இதனால் பென்டகன் உஷாராக இருந்தது குறித்தும் திரைக்கதையில் வெளிக்காட்டவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

எந்தக் காலத்திலும் பலவீனங்கள் உங்கள் மனதை வெல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நெஞ்சை வெடிக்க வைக்கும் வடபுலத்து கொடூரங்கள்

போருக்குப் பின்பான பாதிப்புகள் பற்றிய கவலைகள் மீதியாக இருந்தாலும் அந்தப் பாதிப்புகளிலிருந்து மக்கள் சமூகத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இப்போதெல்லாம் வடபுலத்தின் கலாசாரக் கோலங்கள், திகில் சம்பவங்கள் என அனைத்தும் நாம் எங்கே போகின்றோம் என்ற கேள்வியை எழுப்பவே செய்யும்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினமும், அதற்கு முன்பும் நடந்த இரண்டு சம்பவங்கள் இங்கு நோக்குதற்குரியது.

நேற்று முன்தினம், கோப்பாய் தெற்குப் பகுதியில் ஆண், பெண் என இருவர் தூக்கில் தொங்கியபடி சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரும் தற்கொலை செய்து கொண்டனரா? அல்லது கொலை செய்யப்பட்டனரா? என்பது விசாரணைக்குரிய விடயம்.

ஆனால் இருவரின் சடலங்கள் ஒரு வெளி வளவில் தூக்கில் தொங்கியபடி கிடப்பதென்பது சாதாரண விடயமன்று. இத்தகைய சம்பவங்களைப் பார்ப்பதும், கேட்பதும் இளம் சமூகத்தின் மத்தியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

எனினும் அதுபற்றி யாழ்ப்பாண சமூகம் அதிகம் அலட்டிக்கொள்ளாமல் அமைதியாக இருக்கின்றது.

இது ஒரு தேர்தல் காலமாக இருந்தால் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று கண்ணீர் விட்டு அறிக்கை எழுதி ஆற்றுப்படுத்தியிருப்பர்.

கெடுகாலம் இது தேர்தல் இல்லாத காலம். அதனால் யாருமே இவைபற்றி சிந்திக்கவில்லை.

அண்மையில் கூட யாழ்ப்பாணம் சுண்டுக்குளிச் சந்தியை அண்மித்த பகுதியில் பெண் ஒருவரைக் குத்திக் கொலை செய்துவிட்டு தன்னையும் பெற்றோல் ஊற்றி எரியூட்டி யாழ்ப்பாண குடாநாட்டையே அதிரவைத்த ஆண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தக் கொடூரமான சம்பவங்களின் பின்னணியில் நெறிபிறழ்வான நடத்தைகளே மூல காரணமாக இருப்பதை அறியும்போது நெஞ்சு வெடித்துவிடும் போலுள்ளது.

கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த ஒரு இனம் இப்போது கட்டுப்பாட்டை இழந்திருப்பது இத்தகைய கொடூர முடிவுகளுக்கானதாக இருப்பதால், இது பற்றி சமய, சமூக, அரச அமைப்புக்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

இல்லையேல் நிலைமை படு மோசமாகிவிடும்.

# இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண வலியுறுத்தி வைகோ இன்று ஆர்ப்பாட்டம்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்தும் வகையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக வைகோ வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள சிங்கள இராணுவத்தையும் பொலிஸாரையும் உடனடியாக அகற்ற வேண்டும். சிங்கள குடியேற்றங்களை தடுத்து நியாயமற்ற வகையில் குடியேறியவர்களை வெளியேற்ற இந்தியா அரசும் உலக நாடுகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஈழத்தமிழர் இனப்பிரச்சினைக்கு சுதந்திரத் தமிழ் ஈழ தேசம் மட்டுமே தீர்வாக முடியும்.

தமிழீழம் அமைவதற்கான பொது வாக்கெடுப்பை உலக பார்வையாளர்கள் கண்காணிப்பில் நடத்துவதற்கும் உலகின் பல நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் அந்தந்த நாடுகளியேயே வாக்கெடுப்பில் பங்கேற்க தேவையான நடவடிக்கைகளை ஐ.நா.சபை மேற்கொள்ள வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலிறுத்தவும் அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது. இதில் ஈழத்தமிழ் உணர்வாளர்களும் கட்சி, மாநில எல்லைகளை கடந்து அனைத்து தரப்பினரும் பங்கேற்க வேண் டும் என்று அவர் அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுகழகத்தின் மூத்த வீரர் சி.தர்மரத்தினம் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஹச் நிறுவனத்தின் அனுசரணையுடன் வல்வை விளையாட்டு கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

விலகல் முறையில் நடைபெறும் இப்போட்டியில் இரண்டாவது அரை இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ஶ்ரீ-63)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(நல்லூர்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சன சமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காந்திஜீ சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் நிலையத் தலைவர் த.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜன நாயக கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஐங்கரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கு பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம், அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ்ப்பாணக் கிளையின் தலைவர் கா.கார்த்திகேசு ஆகியோர் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-134)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# வரலட்சுமி விரதத்தின் மகிமை

ஆவணிமாதம் சுக்கிலபட்சத்து வெள்ளிக்கிழமையில் மங்கையர் அனுஷ்டிக்கும் முக்கியமான பண்டிகை வரலட்சுமி விரதம். இது வரங்களை அள்ளிக் கொடுக்கும் வரலட்சுமியைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவது.

மணமான பெண்கள் தலை நோன்பு நோற்பது இந்த விரதத்தின் ஒரு விசேடமான வைபவமாகும். மாங்கல்யம் நிலைத்து இருக்கவும் வீட்டில் எப்போதும் சுபீட்சம் நிலவவும் இலட்சுமியின் அருள் கிடைக்கவும் இந்தப் பூசை அவசியமாகக் கருதப்படுகிறது.

செல்வத்திற்கு அதிபதி மகாலட்சுமி. இவள் பாற்கடலில் அவதரித்தவள். பெண்களுக்கு மங்கலத்தைத் தருபவள். மகாவிஷ்ணுவின் இதயத் தாமரையில் கொலு வீற்றிருப்பவள். அவளைப் பூசித்தால் குடும்பத்தில் மங்கலமும் குடும்பத்தலைவனுக்கு நல்லாயுளும் எல்லா நலன்களும் கிடைக்கும்.

மகாலட்சுமி எட்டு வடிவங்களில் காட்சி தந்து ஐஸ்வர்யங்களைத் தருகிறாள். தனலட்சுமி, தான்யலட்சுமி, கஜலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, தைரியலட்சுமி, வித்யாலட்சுமி என 8 நிலைகளில் பெயருக்குத் தகுந்தபடி தனித்தனி வடிவம் தாங்கியிருக்கிறாள்.

## வெள்ளி நற்சிந்தனை



32

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

எமக்கு வேண்டியவற்றை நாம் மிக எளிதாக பெற்றுவிட்டால் இறைவழிபாட்டை மறந்து விடுவதுண்டு. இந்த மனித இயல்பை மணிவாசகர் தானும் கொண்டிருப்பதை உணர்கிறார். எனவே தனக்கு இறைவழிபாட்டிலே துணை செய்யாத தன் நெஞ்சத்தை முன்னிலைப்படுத்தி ஏசுகிறார். பிணநெஞ்சமென நெஞ்சிற்குப் பெயர் சூட்டி மிக வேதனையோடு பேசுகிறார்.

பிணம் போலப் பயனற்றுக் கிடைக்கும் நெஞ்சமே ! நீ ஒன்றை நன்குணர வேண்டும். சிறிதும் அறிவில்லாத என்னை இறைவனே வலிய வந்து என் உள்ளத்திலே புகுந்து என்னை ஆட்கொண்டான். தன்னை நான் அறிவதற்கு உரிய உண்மை அறிவினை எனக்கு தந்தருளினான். வீட்டு நெறிகள் யாவற்றையும் புலப்படுத்தினான். அவனே எனக்கு தந்தையானான். என்னுடைய எல்லாப் பந்தங்களையும் அறுக்கின்ற இறைவனை எப்போதும் பிரியாதிருக்கும் இன்னருளையும் நான் பெற்றிருந்தேன். ஆனால் நீயோ தடுமாறி நிற்கிறாய். அத்தடுமாற்றத்தால் பொய் நெறிகளிலே நான் செல்ல வைத்து விட்டாய். என்னைக் கீழ்ப்படுத்தி விட்டாய். என்னைக் கெடுமாறு செய்துவிட்டாய். உனது இயல்பை நான் என்னென்று சொல்வது?

மனம் தூய்மையற்ற நிலையில் இறை வழிபாடு பற்றிய சிந்தனை எம்மைவிட்டகன்றுவிடும். இறைவன் வலியவந்து இன்னருள் செய்த போதும் மணிவாசகர் அதனை மறந்து விட்டார். உலகவாழ்வியல் சிந்தனையோடு இருக்கிறார். அதற்குக் காரணம் கட்டுப்பாடற்ற தன்னுடைய நெஞ்சமே எனச் சுட்டிக்காட்டுகிறார். 'மாறாடுதி பிண நெஞ்சே' என்றதொடர் அவரது நிலையை நன்கு விளக்குகின்றது. நெஞ்சத்தை நோக்கிக் 'கீழ்ப்படுத்தாய்! கெடுத்தாய் என்னைக் கைநெடுமாறே' எனக் கடிந்துரைக்கிறார்.

மனித நிலையில் எமது பாசப் பிணிப்பு எம்மை நிலை தளரச் செய்ய வல்லது. ஆனால் இறைபற்றிய சிந்தனையால் பாசப்பிணிப்பு அகலும். அதற்கு மனக்கட்டுப்பாடு தேவை. மணிவாசகருடைய மனமோ பிணமாகச் செயலற்றுக்கிடக்கிறது. நெஞ்சின் இயல்பை உணராமல் நாம் எதையும் செய்யமுடியாது. இறைவனுடைய இனிய அருளைப்பெற்ற பின்பும் பொய் நெறியிற் செல்வதை 'கிறி' என்னும் சொல்லாற் சுட்டியுள்ளார். 'கிறி' என்பது பொய், வஞ்சனையுடனான செயற்பாடு.

எனவே பொய் நெறிகளிலே தான் மீண்டும் செல்வதை நன்குணர்ந்து தன்னைத் திருத்திக் கொள்ள முயல்கிறார். நெஞ்சம் உதவி செய்யாவிடில் எதுவும் செய்யமுடியாது என்பதே மணிவாசகர் கருத்தாகும். எனவே நாம் முதலில் நெஞ்சத்தை நெறிப்படுத்த வேண்டும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் நாம் இறைவழிபாடு செய்யலாம். இம்மூன்றில் முதலில் மனத்தை ஒரு நிலைப்படுத்த வேண்டும். அதனைத் தூய்மைப்படுத்த வேண்டும். அதற்காக மிகவும் இறுக்கமாகச் செயற்படவேண்டும். இறைவனை அறியும் உண்மையான அறிவு பெற்றோருக்கு இது எளிதில் கைகூடும் என்பதையே மணிவாசகர் தமது பாடல் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

*"அறிவிலாத வெனப்புகுந் தாண்*
*டுகொண் டறிவதை யருளிமேல்*
*நெறியே லாம்புலமாக்கிய எந்*
*தையைப் பந்தனை யறுப்பாணைப்*
*பிறிவிலாதவின் னருள்கள் பெற்*
*றிருந்து மாறாடுதி பிணநெஞ்சே*
*கிறியெ லாமினக் கீழ்ப்படுத் தாய்*
*கெடுத் தாயென்னைக் கெடுமாறே"*

# 160 ஆவது வருடத்தில் சிங்கர் நிறுவனம்!



சிங்கர் நிறுவனமானது 1851 ஆம் ஆண்டு சேர். ஐசாக் மெரிட் சிங்கரினால் தையல் மெஷினை விற்பனைக்காக அறிமுகம் செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது. உலகின் முதலாவது தையல் மெஷின் சிங்கர் ஆகும். சிங்கர் நிறுவனம் இன்று தனது 160 வருட நீண்டகால சேவைக்கான தினமாக உலகளாவிய ரீதியில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

ஓர் நிறுவனத்தினை ஆரம்பித்து குறுகிய காலமாவது சிறப்பாக நடாத்துவதென்பது இலகுவான காரியமல்ல. சிறந்த முகாமைத்துவமும் மக்களாதரவும் தொடர்ச்சியாக இருந்தபடியினால் சிங்கர் நிறுவனத்தினால் 160 வருடங்களாக மக்கள் மத்தியில் நிலைத்து நின்று சேவையாற்றக் கூடியதாக உள்ளது.

வீட்டுப் பாவனைப் பொருட்களில் ஒன்றான தையல் மெஷினை பாவனையாளர்களுக்கு வழங்கிய சிங்கர் நிறுவனம் இன்று வீட்டிற்குத் தேவையான எல்லாவித பாவனைப் பொருட்களையும்,

அதாவது வீட்டின் வரவேற்பு அறையிலிருந்து சமையலறை வரையிலான பொருட்களான குஷன், ஷோபாக்கள், எயார் கண்டிஷன்கள், மின்விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மரத்தளபாடங்கள், சலவை இயந்திரங்கள், உடற்பயிற்சி இயந்திரங்கள், சமையலறைக்குத் தேவையான காஸ் அடுப்புக்கள், கிறைண்டர்கள், றைஸ் குக்கர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள், ட்ரக்டர்கள் மேலும் பற்பல பொருட்களை உத்தரவாதத்துடன் வழங்கி வருகின்றது.

சிங்கர் நிறுவனம் தவணைக் கொடுப்பனவு முறையினை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்ததிலும் முதன்மை பெறுகிறது. பொருட்களை விற்பனை செய்ததுடன் சிங்கரின் செயற்பாடு முடிவடைவதில்லை. வழங்கப்பட்ட உத்தரவாதத்தினை செயற்படுத்துவதற்காக நாடு முழுவதும் அதன் சேவை நிலையங்களை நடாத்துகின்றது.

சிங்கரின் நீண்டகால செயற்பாட்டிற்கான மற்றுமோர் காரணம் அதன் சமூக சேவைத் திட்டங்களாகும். இலங்கையில் ஆண்டுதோறும் நிறுவனங்களுக்கிடையே நடாத்தப்படுகின்ற சமூக சேவைகளுக்காக வழங்கப்டும் பரிசில்களையும தொடர்ந்து பெற்று வருகின்றது.

தற்போது சிங்கர் நிறுவனம் தனது 160 வருடகால சேவையினை முன்னிட்டு இயலாமை நிலையிலுள்ள 160 பாடசாலைகளைத் தெரிவு செய்து அவற்றின் அத்தியாவசிய தேவைகளான நீர்வசதி, கூரை, மலசலகூடம், வாசிகசாலை, மின் இணைப்பு, விளையாட்டு மைதானம் போன்ற வசதிகளை செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் ஓமந்தை புகையிரத நிலையம் சிங்கர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

**மாணிக்கவேல் மகேசரட்ணம்**
**சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர்**

சிங்கர் நிறுவனம் மக்களின் நன்மதிப்பினைத் தொடர்ந்தும் பேணி மேலும் பல்லாண்டுகள் சிறப்புற செயலாற்றுமென நிச்சயமாகக் கூறலாம்.

## மர்ம மனிதனை தேடிச் சென்றவர் மின்வேலியில் சிக்கி உயிரிழப்பு

(கொழும்பு)

மர்ம மனிதனை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இளைஞனொருவன் பன்றி பிடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்குண்டு நேற்று முன்தினம் நள்ளிரவு உயிரிழந்துள்ளார்.

தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலம்பொடை கிராமத்தில் மர்ம மனிதர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக கூறப்படும் நிலையில் இரவு வேளைகளில் பிரதேச இளைஞர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மர்ம மனிதன் என்ற சந்தேகத்தின் பேரில் நபரொருவரை வயல் வெளியில் விரட்டி சென்ற போது மேற்படி இளைஞர்களில் ஒருவரான எம்.றிபாஸ் என்ற 22 வயது இளைஞன் மின்வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு கலாநிதி பட்டம் வழங்கி சீனா கௌரவம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சீன தலைநகர் பீஜிங்கிலுள்ள சர்வதேச கற்கைகளுக்கான பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை கற்கைகளுக்கான பிரிவு நேற்று ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிடுகிறது.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் அண்மையில் சீனா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணி முதல் 10 மணிவரை செழியான் வீதியிலும் காலை 10 மணிமுதல் 11 மணிவரை ஒஸ்மானியாக் கல்லூரி வீதி, குறுக்கு வீதி, (ஆஸாத்வீதி) யிலும் காலை 11 மணிமுதல் 12 மணிவரை நாவலர் வீதி(ஐந்து சந்தி-நான்கு சந்தி பகுதி ஆகிய இடங்களிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சிவத்தொண்டன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிவத்தொண்டன் நிலையத்தினால் வெளியிடப்படும் ஜுலை-ஓகஸ்ட் மாதத்திற்கான சிவத்தொண்டன் இதழ் வெளிவந்துள்ளது.

இதில் கந்தவேளே! ஆதரித்தெனைத் தாளில் வைத்திடு, ஞான ஆசாரவிசாரம், இந்து மதத்தின் சாரம் என்ன?, விவேக சூடாமணி, மழலை மந்திரம், கலியுக வரதன் கந்தனே, நற்சிந்தனை ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ)


තල් සංවර්ධන මණ්ඩලය

பனை அபிவிருத்திச் சபை

PALMYRAH DEVELOPMENT BOARD

සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

**Research Facilitation Centre Building of Palmyrah Research Institute for Palmyrah Development Board at Navatkuli, Kaithady - Jaffna**

1.The Chairman of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for " Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board, Jaffna" as described below and estimated to cost of Rs.5.50 million.

The construction period is 120 Days.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M6/ C7 or above with the institute for Construction Training and Development (ICTAD).

4.Interested bidders may obtain further information from the Depart ment of Building (Central), Beach Road, Jaffna or The Chairman, Palmyrah Development Board (Jaffna), and inspect the bidding documents at the same address on any working day from 8:30 hrs to 16:15 hrs. Contact numbers are Phone:021 222 2034, Facsmile: 021 222 4154 & Building Department No:021 222 2781.

5. A Complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written app lication to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 10th August 2011 until 19th August 2011 from 8:30 hrs to 16:15 hrs upon payment of non refundable fee of Rupees one thousand (Rs.1,000/=).

6.Bids shall be delivered or sent by registered post to The Chairman, palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna before 10:00 hrs on 22th August 2011. Bids will be opened soon after closing at the Office of The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders' repre sentatives who choose the attend.

7.All bids shall be accompanied by a Bid Security obtain from a reputed Bank in Sri Lanka
- In the form included in the Section 09 of the Bidding document
- In favour The Chairman, Palmyrah Development Board
- For an amount of Rupees One hundred and ten thousand (Rs.110,000.00)
- Valid up to 07th November 2011.

**Pasupathy Seevarathnam,**
**Chairman,**
**Palmyrah Development Board.**

(C-3999)

# கீரிமலை கடற்பகுதியில் கற்பாறைகளை அகற்றி மக்கள் நீராட வழிவகை செய்யவேண்டும்

## அமைச்சர் ராஜிதவுக்கு விஜயகலா எம்.பி.கடிதம்

கீரிமலை ஆலயத்துக்கு அருகிலுள்ள கடற்பகுதியினை மக்கள் நீராடத்தக்க வகையில் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கடற்பகுதியில் காணப்படும் கற்பாறைகள் மற்றும் முருகைக்கற்கள் என்பவற்றை அகற்றுவதற்கும் இங்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்பு அரணை புனரமைப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும் என்று மீன்பிடித்துறை மற்றும் கடல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜியகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கடிதம் ஒன்றினை அவர் அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கீரிமலைக்கடற்பகுதியில் ஆடி அமாவாசையை முன்னிட்டு இந்துக்கள் பிதிர்க்கடன்களை நிறைவு செய்வது வழமையாகும்.

கடந்த 30 திகதி ஆடி அமாவாசையின்போது ஆயிரக்கணக்கான இந்துக்கள் தமது மறைந்த தந்தையை நினைவு கூர்ந்து பிதிர்க்கடன்களை கீரிமலை கடற்கரையில் மேற்கொண்டனர்.

இதன்போது கீரிமலை கடற்பகுதியில் நீராடிய பலர் கற்பாறைகள் மற்றும் முருங்கைக்கல் என்பவற்றினால் காயமடைந்தனர். எனவே கீரிமலை கடற்பரப்பில் நீராடத்தக்க வகையில் அங்கு காணப்படும் கற்பாறைகள் மற்றும் முருங்கைக்கற்கள் அகற்றப்பட வேண்டியது அவசியமாகும். கீரிமலையில் இந்துக்கள் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்காக எனது கணவர் இந்துக் கலாசார அமைச்சராக பதவி வகித்தபோது 200 மீற்றர் நீளமான பெரிய திறந்த மண்டபமொன்றினை அமைத்திருந்தார். அத்துடன் 200 மீற்றர் நீளமான தடுப்பு அணையொன்றினையும் அமைத்திருந்தார்.

இந்த தடுப்பணையானது தற்போது சேதமடைந்து காணப்படுகின்றது. எனவே தங்களது அமைச்சின் மூலம் 50 மில்லியன் ரூபாயினை ஒதுக்கி கீரிமலை கடற் பரப்பில் 200 மீற்றர் நீளத்திற்கும் 50 மீற்றர் அகலத்திற்கும் பொது மக்கள் நீராடத் தக்க வகையில் அங்கு காணப்படும் கற்பாறைகள் மற்றும் முருங்கைக்கற்கள் என்பவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்என அவர் கேட்டுள்ளார். (ச)

## மரண தண்டனை...

விடுதலைப்புலி அமைப்பினரால் ஒரு தற்கொலைக்குண்டுதாரியின் மூலம் கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் குற்றவாளிகள் என்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட நளினி, அவரது கணவர் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

நளினியின் தூக்குத் தண்டனை சோனியா காந்தியின் தலையீட்டின் காரணமாக ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. மற்றும் மூன்று பேர்களான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் தமது தண்டனையை குறைக்குமாறு கோரி இந்திய குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்த கருணை மனுவும் தற்போது நிராகரிக்கப்பட்டுள்ளது.

அவர்களது கருணை மனு நிராகரிக்கப்பட்டுள்ள விடயத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகையின் பேச்சாளர் அர்ச்சனா தத்தா அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுடில்லி செங்கோட்டையிலுள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்திய பாகிஸ்தானியரான அஷ்ஃபக் ஆரீஃப்புக்கு தூக்குத் தண்டனையை இந்திய உச்சநீதிமன்றம் உறுதிசெய்துள்ளது. (எ-5)

## இந்திய...

கொன்றது குறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக விவாதிக்கப்படும் என்பதாக இருந்தது.

ஆனால் அதைத் திருத்தி போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிவாரணத்துக்கு இந்திய அரசு வழங்கிய நிவாரணம் குறித்து விவாதிப்பது என்று திருத்தப்பட்டுள்ளது.

இம் மாற்றம் குறித்து குழப்பம் அடைந்திருக்கும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டனர் என்று சொல்வதற்குக் கூடவா இந்திய நாடாளுமன்றத்தில் தடை என கேள்வி எழுப்பியுள்ளதுடன் கடும் எதிர்ப்பும் தெரிவித்தனர். (எ-5)

## பிரபாகரன்...

இந்த வீடு எத்தகைய தாக்குதலுக்கும் சிதைவுறாத வகையில் உள்ளே பாதுகாப்பான ஆழமான பதுங்குகுழிகளைக் கொண்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு பதுங்குகுழிப் பாதைக்கும் பலமான இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ளது.

இதேவேளை இங்கு பிரபாகரன் தங்கினார் என்பதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் அதன் அமைப்பு முறையை அவதானித்த இராணுவத்தினர் இங்கு பிரபாகரன் தங்கியிருந்ததாகத் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஜெயலலிதா-ஹிலாரி...

அத்துடன் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமுக்கும் இடையிலான சந்திப்பைத் தொடர்ந்தே இச் சம்பவங்கள் நடைபெறுவதாகவும் ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பௌத்த பக்தர்கள் தமிழ் நாட்டிற்குச் செல்கிறார்கள். உலகெங்கிலுமிருந்து மில்லியன் கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். இது எமது பக்தர்களுக்கு மாத்திரமான அச்சுறுத்தல் அல்ல. மாறாக உலகிலுள்ள அனைத்துப் பௌத்த பக்தர்களுக்குமான அச்சுறுத்தலாகும் என வண. விமல சாரதேரர் கூறினார்.

இந் நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் உலகெங்கிலுமுள்ள பௌத்தர்களை இலங்கைக்கு வருமாறு நாம் கோருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவிலுள்ள பௌத்தர்கள் இந்த அச்சுறுத்தல்களை தீவிரமாகக் கருத்திற்கொண்டு இவற்றுக்கெதிரான நடவடிக்கை மேற்கொள்வார்கள் என நம்புகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினரான வண. அதுரலியே ரத்ன தேரர் கூறினார். (எ-5)

## கொலை...

செல்வபுரத்தைச் சேர்ந்த அருளன் தனபாலசிங்கம் (வயது43) இந்துஷா (வயது 24) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டவர்கள்.

இவர்கள் இருவரின் மரணத்திலும் சந்தேகம் எழுந்ததை அடுத்து கோப்பாய் பொலிசார் இவர்களின் உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை நேற்று இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் மூலம் இருவரும் கொலை செய்யப்பட்ட பின்பே தூக்கிலிடப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு தற்கொலை செய்தமைக்கான அறிகுறிகள் ஏதும்உடலில் தென்பட வில்லை என்பதையும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. (எ-6)

## அமெரிக்கா...

என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற வேளையில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் நிரூபித்துள்ளோம். ஒவ்வொரு கேள்விக்கும் நாங்கள் பதிலளித்துள்ளோம்.

அரசாங்கம் மேற்கொண்ட பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள் பற்றி அமெரிக்காவுக்கு இலங்கை நேரடியாக அறிவிக்கவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாம் பல தடவை பதில் கூறிவிட்டோம்.

அமெரிக்காவின் இறுதி எச்சரிக்கையை அரசாங்கம் சிறு விடயமாக கருதவில்லை எனவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ச-5)

## தமிழக அரசு ஓயாது...

வேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் எழுந்துள்ள பதற்ற நிலை குறித்து நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்து தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா பேசினார். அவர் தனது நீண்ட உரையில் தெரிவித்ததாவது,

கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை உள்நாட்டு போரின்போது மனிதாபிமானமற்ற முறையில் ஈவு இரக்கமின்றி அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்தி அதன் விளைவாக பல்லாயிரக்கணக்காண தமிழர்கள் இறந்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற துடன் இனப்படுகொலையை நடத்தியவர்களை போர்க்குற்றவாளிகள் என அறிவிக்க இந்திய அரசு ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்த வேண்டும் என்றும் இது மட்டுமல்லாமல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும் முழு சம உரிமை கிடைக்கும்வரை அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் கடந்த யூன்மாதம் 8ஆம் திகதி அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அதனை விமர்சித்து இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சிக்கு பேட்டியளித்திருப்பது இலங்கை அரசுதான் செய்தவற்றை நியாயப்படுத்துவதுபோல் அமைந்துள்ளது,

இந்த தீர்மானத்தை நான் அரசியல் ஆதாயத்திற்காக கொண்டுவந்து நிறைவேற்றியதாக கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருக்கிறார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் அமைக்கப்பட்ட மூன்று நபர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையிலேயே இந்தத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே ஒழிய அரசியல் ஆதாயத்திற்காக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்பதை முதலில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அனைத்து கட்சிக் கூட்டம், சட்டமன்றக் கட்சித்தலைவர்கள் கூட்டம், தமிழ்நாடு சட்டமன்றபேரவையில் தீர்மானம், மனித சங்கிலி போராட்டம், பிரதமருக்கு தந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அறிவிப்பு, இராஜினாமா கடிதங்களை தானே பெற்றுக் கொண்டது, இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு என பல்வேறு வகையான கண்துடைப்பு நாடகங்களை முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நடத்தியபோது வாய் திறக்காத கோத்தபாய ராஜபக்ஷ, நான் கொண்டுவந்த தீர்மானத்தை விமர்சிக்கிறார் என்றால், அந்தளவுக்கு இந்தத் தீர்மானத்தின் தாக்கம் இருந்திருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன் என்றார்.

கோத்தபாய ராஜபக்ஷ வட இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுதான் முக்கிய பணி என்றும் போர் குற்றவாளிகள் என்று தற்போது கூறுவது பயனற்றது என்றும் பேட்டியளித்திருக்கிறார்.

இலங்கையில் நிலவும் உண்மை நிலைவரம் என்னவென்றால் போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணவோ பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறு வாழ்வு அளிப்பது குறித்தோ எந்தவிதமான நடவடிக்கையும் இலங்கை அரசால் எடுக்கப்படவில்லை என்பதுதான் இவருடைய இந்தப் பேட்டியிலிருந்தே இலங்கை இராணுவம் போர்க்குற்றம் புரிந்திருக்கிறது.

இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்திருக்கிறது என்று மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இலங்கை இராணுவம் போர்க்குற்றம் செய்யவில்லை என்றால் இது தொடர்பான சர்வதேச விசாரணைக்கு தயார் என இலங்கை அரசு அறிவித்திருக்க வேண்டும்.

ஆனால் அதைச் செய்யாமல் தேவையற்ற பேட்டிகளை அளித்துவருவது செய்த தவறை மூடிமறைக்கும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டுவருகிறதோ என்ற சந்தேகத்தை சர்வதேச நாடுகள் மத்தியில் தற்போது ஏற்படுத்தியுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ நான்கொண்டு வந்த தீர்மாணத்தை விமர்சிக்கிறார் என்றால் அந்தளவுக்கு இந்தத் தீர்மானத்தின் தாக்கம் இருந் திருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன் என அவர் தனது உரையில் தெரிவித்தார். (எ-5)

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

**பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்**



செந்தமிழ் ஊறும்
நம்தமிழ் ஊரில்
பைந்தமிழ் போற்றும்
பொன் மனச் செம்மல்
வெந்தணல் காட்சி
வேகிடும் நாட்டில்
உம்பணி கண்டு
வியந்து போனோம்

இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 02மணி (ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகந் தரவும்.

-தேவா மணிவிழா சபை

வாழ்த்துவோர்:
பொருளியல் கல்லூரி
இணுவில், யாழ்ப்பாணம்.
(சி-3913)



## நிரு ரியூசன் சென்றர்
## கோண்டாவில்

**A/L 2013 தமிழ்**
**திரு. S. குகன்**

முழு பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
(3898)







# யுத்தத்துக்கு ஒத்துழைப்பு...

சமாதானம்மற்றும்நல்லிணக்கத்தை ஏற்படுத்தியமை பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து இன மக்களும் வாழ்வதற்கேற்ப சூழலை உருவாக்கியமை மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான நற்புறவை கட்டியெழுப்பியமை ஆகிய நடவடிக் கைகளை பாராட்டும் வகையில் ஜனாதிபதிக்கு இந்த கலாநிதிப்பட்டம் வழங் கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊட கப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, மக்களின் கலாசாரங்கள் போன்றே அவர்களின் பாரம்பரிய விழுமியங்கள் மற்றும் எதிர்பார்ப் புகள் தொடர்பில் நல்லிணக்கத்துடன் செயற்படுத்துவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை பெற்றுக்கொள்ள முடியும் எனசுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்துதுரித பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிக ளை மேம்படுத்துவதில் சீனா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.


## காணி விற்பனைக்கு

ஈச்சமோட்டையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (சுண்டிக்குளிச் சந்தியில் இருந்து குறுகிய தூரத்தில்)

மேலதிக விபரங்களுக்கு : 0212263302
0783567043
(சி-3992)








**IDM**
Chunnakam

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும்
வலிகாம மாணவர்களுக்கு எங்கள்
வாழ்த்துகள்




அதிபர் சமூகம் எம்முடன்



அதிபர் சமூகம் எம்முடன்



கல்விப்பணிப் பாளர்கள் எம்முடன்



ஆசிரிய சமூகம் எம்முடன்



## உங்கள் கணனி வேர்கள் பரவட்டும்
## IDM Chunnakaத்தில்

மாணவர்களே உங்கள் எதிர்காலம் சிறப்புறவேண்டுமா......இணையுங்கள் Chunnakam IDM கணனி விருட்சத்தோடு..
வலிகாம பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே நவீன கணனி உலகினில் நீங்களும் எம்முடன் இணைந்தீர்கள் அல்லவா, உங்களின் பாடசாலை மாணவர்கள் நற்பெறுபேறு பெற்றுக்கொள்ள நாமும் உங்களுடன் இணைந்து இறைவனை வேண்டுகின்றோம்.
(5766)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.